பக்கங்கள் – 12+XVI
விலை – ரூபா 50
Registered as a Newspaper
# உதயன்
சுடர் : 40
கதிர் : 36
புதன்கிழமை
01 ஜனவரி 2025
மார்கழி 17 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

# பிரபாகரன் தப்பிச் செல்வதற்காக போர்நிறுத்தம் செய்தார் மஹிந்த!



## பொன்சேகா பரபரப்புத் தகவல்

**கொழும்பு, ஜனவரி 01**

இறுதிப்போரின்போது புலிகளின் தலைவர் பிரபாகரன் உள்ளிட்டோர் தப்பிச்செல்வதற்காகவே 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மஹிந்த ராஜபக்ச போர் நிறுத்தத்தை அறிவித்தார். அதனால் அவர் மீது புலிகளுக்கு கோபம் இருக்காது.எனவே மஹிந்த ராஜபக்சமீது புலிகள் ஒருபோதும் தாக்குதல் நடத்தமாட்டார்கள் என்று பரபரப்பு தகவலை வெளியிட்டுள்ளார் இறுதிக்கட்ட போரின் போது இராணுவ தளபதியாக செயற்பட்ட பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா.

10

## ரயிலுடன் மோதி பெண் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜன.1
மிருசுவிலில் நேற்று நடந்த ரயில் விபத்தில் 47 வயதுடைய குடும்பப் பெண்

10

## மண்ணெண்ணெய் விலை குறைப்பு

கொழும்பு, ஜன.1
நேற்றுச் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 12 மணிமுதல் நடைமுறைக்கு வரும்

10

## மயங்கி வீழ்ந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன.1
வீட்டில் திடீரென மயங்கிய குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஊரெழு.

10

## தவறான முடிவெடுத்து மாணவி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன.1
யாழ்ப்பாணத்தில் 19 வயது மாணவி ஒருவர் தவறான முடிவெடுத்து

10

## உயர்தரப் பெறுபேறுகள் ஏப்ரலுக்குள் வெளியாகும்!

கொழும்பு, ஜன.1
க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குள் வெளியாகும் என்று

10



யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேராலயத்தில் நேற்று நள்ளிரவு புத்தாண்டு பிறப்பு சிறப்பு ஆராதனைகள் நடைபெற்றன.

## சாவகச்சேரி மருத்துவமனையில் இனிமேல் 'பாஸ்'!

யாழ்ப்பாணம், ஜன.1
சாவகச்சேரி மருத்துவமனையில் இன்று முதல் பாஸ் நடைமுறை பின்பற்றப்படும் என்று மருத்துவமனை

10




## அநுர அரசின் பாதீடு மார்ச் 21 வாக்கெடுப்பு



கொழும்பு, ஜன.01
2025 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்ட மூலம் தொடர்பான விவாதத்தை (வரவுசெலவுத்திட்ட விவாதம்) 2025 பெப்ரவரி 18ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம்

10

## ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை திருத்துவதற்கு யோசனை

கொழும்பு, ஜன.1
இலஞ்ச, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.
2023 ஆம் ஆண்டின்

11

## யாழ். மாநகரசபை எல்லைக்குள் திண்மக்கழிவகற்றல் பதிவு அட்டை

யாழ்ப்பாணம், ஜன.1
யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் உள்ள ஒவ்வொரு வீடுகளுக்கும் திண்மக் கழிவகற்றல் பதிவு அட்டையை விநியோகித்து, குறைந்த பட்சம் வாரத்தில் ஒருதடவையாவது ஒவ்வொரு வீடுகளிலும்

10

தரம் - 5 புலமைப் பரிசில்

## வெளியான வினாக்களுக்கு திறந்தபுள்ளிகள் சட்டவிரோதம்

### உயர்நீதிமன்றம் நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஜன.1
கடந்த செப்ரெம்பர் மாதம் நடத்தப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் முதலாம் வினாத்தாளில் கேள்விகள் முன்கூட்டியே வெளியானமை மாணவர்கள்

11

## பாடசாலைகள் நாளை ஆரம்பம்

கொழும்பு, ஜன.1
அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற அனைத்துப் பாடசாலைகளினதும் மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டக் கற்றல் செயற்பாடுகள் நாளை வியா

10




'இந்த வருசமாவது எங்களுக்கு உருப்படியான தீர்வு கிடைக்குமோ? இல்லாட்டி எப்பவும் இலவு காத்த கிளியளா இருக்கப்போறமோ?'

## வவுனியா விபத்தில் 7 வயதுச் சிறுவன் பலி

வவுனியா, ஜன.1
வவுனியா பாவற்குளத்தில் நேற்று மாலை நடந்த விபத்தில் 7 வயதுச் சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார். அப்துல் மஜித் உமர் (வயது-7) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

10

## எலிக்காய்ச்சல் அறிகுறியோடு இருவர் மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், ஜன.1
எலிக்காய்ச்சல் அறிகுறிகளுடன் மேலும் இருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.
இது குறித்து ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பரவிய எலிக் காய்ச்சல் தற்போது கட்டுப்

10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரிசிக்குத் தட்டுப்பாடு

# பாற்சோறு இல்லாமல் புத்தாண்டில் பரிதவிப்பு

**கொழும்பு, ஜன. 1**

**சந்தையில் நாட்டு அரிசி மற்றும் வெள்ளை அரிசி வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், புத்தாண்டை வரவேற்க பாற்சோறு சமைக்க முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளதாக மரதகஹமுல அரிசி வியாபாரிகள் சங்கத்தின் உறுப்பினர் எஸ்.எஸ்.ரணசிங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது: சந்தையில் உள்ளூர் அரிசி வகைகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. குறிப்பாக பால் சோறு தயாரிக்கும் வெள்ளை அரிசிக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. வெள்ளை அரிசிக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக மக்கள் இம்முறை புத்தாண்டை வரவேற்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்றார்.

அரிசிக்கு நாட்டில் ஏற்பட்ட கடும் தட்டுப்பாடு காரணமாக இந்தியாவில் இருந்து 70ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதியளித்தது. இறக்குமதி செய்யும் அரிசிக்கு கட்டுப்பாட்டு விலையும் விதிக்கப்பட்டது. அதன் பிரகாரம் மக்கள் அதிகம் நுகரும் நாட்டரிசியை 225 ரூபா என்ற சில்லறை விலைக்கு மொத்த வியாபாரிகள் வழங்க வேண்டும் என்றும் நாட்டரிசியை 230 ரூபா என்ற அதிகபட்ச சில்லறை விலையில் விற்பனை செய்யும் வகையிலான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டது. ஆனால், 225 ரூபா என்ற சில்லறை விலையில் அரிசியை பெற்று 230 ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியாதென வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். அதனால் பெரும்பாலான வர்த்தகர்கள் அரிசியை கொள்வனவு செய்யவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

## அரிசி இறக்குமதியில் அரசாங்கம் தோல்வி!

*தேசிய விவசாய ஒன்றியம் குற்றச்சாட்டு*

கொழும்பு, ஜன.1

அரிசி தட்டுப்பாட்டுக்கு தீர்வாக 10 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியை கூட இறக்குமதி செய்ய முடியாத அரசாங்கம் அரிசி மாபியாக்களை எவ்வாறு இல்லாதொழிக்கும் என்று கேள்வியெழுப்பியுள்ளார் தேசிய விவசாய ஒன்றியத்தின் தலைவர் அனுராத தென்னகோன்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது வாய்ச்சொல் வீரரான அமைச்சர் வசந்த சமரசிங்க தலைமறைவாகியுள்ளார். சந்தையில் நிலவும் அரிசித் தட்டுப்பாட்டுக்கு தீர்வாக இந்தியாவில் இருந்து 70 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசி இறக்குமதி செய்யப்படும் என்று அரசாங்கம் கூறியது. ஆனால் இதுவரையில் 10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி கூட இறக்குமதி செய்யப்படவில்லை. தேசிய விவசாயத்தை மேம்படுத்துவதற்கு நடைமுறைக்கு சாத்தியமான எந்த நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை - என்றார். (எ-இ)



## நெல் கொள்வனவுக்கு சலுகை வட்டி வீத கடன்

கொழும்பு, ஜன.1

சிறு மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்களுக்கு அரச வங்கிகள் ஊடாக சலுகை வட்டி வீதத்தில் அடகுக் கடன் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரச மற்றும் தனியார் வங்கிகள் மூலம் சலுகை வட்டி வீதத்தில் உயர்ந்தபட்சம் 50 மில்லியன் ரூபா வரைக்கும் நெல் கொள்வனவுக்கான அடகுக் கடன் முறையை நடைமுறைப்படுத்துவதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-இ)

## ரின் மீனுக்கு வற்வரியை குறைக்குக

யாழ்ப்பாணம், ஜன.1

ரின் மீன் மீது விதிக்கப்பட்டுள்ள வற்வரி யைக் குறைக்குமாறு இலங்கை ரின் மீன் உற்பத்தியாளர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. ரின் மீன்களுக்கு கட்டுப்பாட்டு விலையை விதிப்பது பிரச்சினை இல்லையென்றாலும், அவற்றின் மீது விதிக்கப்பட்டுள்ள வற்வரியை குறைக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வற் வரி குறைக்கப்படாவிட்டால் அதன் விளைவை கடற்றொழிலாளர்கள் அனுபவிக்க நேரிடும் எனவும் சங்கத்தின் தலைவர் ஷிரான் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



## இந்தோனேசியப் படகு வாகரையில் ஒதுங்கல்

மட்டக்களப்பு, ஜன. 1

மட்டக்களப்பு வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள பால்சேனை கடற்கரையில் இந்தோனேசிய நாட்டுப் படகொன்று ஆளில்லாத நிலையில் கரையொதுங்கியுள்ளது.

அந்தப் படகு மீட்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-இ)

## பருத்தித்துறையில் அதிகூடிய மழைவீழ்ச்சி!

யாழ்ப்பாணம், ஜன.1

நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி வரையான 24 மணி நேரத்தில் யாழ்.மாவட்டத்தில் அதிகூடிய மழைவீழ்ச்சியாக சுமார் 60 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பருத்தித்துறையில் பதிவாகியுள்ளதாகத் திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் யாழ்.தொல்புரத்தில் 42.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், அச்சுவேலியில் 41.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், தெல்லிப்பழையில் 36.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், நயினாதீவில் 16.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், யாழ்ப்பாணம் கோட்டையில் 14.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், யாழ்.நகரத்தில் 10.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், திருநெல்வேலியில் 8.9 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளன எனவும் திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். (ச-45-66)

82வது பிறந்த நாள் வாழ்த்துக்கள்

ஆறுமுகம் இராஜகோபால்
(செம்பியன் செல்வன்)

உலகத்தில் மனித பிறப்பு
பெருமை வாய்ந்தது.
உயிர் இனத்தை நேசிப்பது
பெருமை வாய்ந்தது.
உயிர்களின் தேவை அறிந்து
பூர்த்தி செய்வது பெருமை வாய்ந்தது.
உயிரே உயிர் இனத்தை உருவாக்குவது
பெருமை வாய்ந்தது.
உலகில் ஒன்றை விட்டு ஒன்று
பிரிவது கொடுமையானது.




10 புது வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
மகன் - ராகுலன்
மனைவி - புவனேஸ்

தோற்றம் 01.01.1943
மறைவு 20.05.2005

CS/2148

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் தளத்தில் சைபர் தாக்குதல்!

**கொழும்பு, ஜன. 1**

**இலங்கைப் பொலிஸ்துறையின் தளங்கள் மீது சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

குறிப்பாக பொலிஸ் திணைக்கள உத்தியோக பூர்வ யூரியூப் தளம் முற்றுமுழுதான கட்டுப்பாட்டை இழந்துள்ளதாகவும், அதை மீட்டெடுக்கும் முயற்சியில் பொலிஸாரின் இணையப் பிரிவினர் செயற்பட்டுவருகின்றனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசதிணைக்களங்கள் மீது அண்மைக்காலமாக சைபர் தாக்குதல் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வந்த நிலையில், பொலிஸ் திணைக்களத்தின் தளங்கள் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் பரபரப்பான விடயமாக மாறியுள்ளது.

பொலிஸ் திணைக்களம் மீதான சைபர் தாக்குதல் தொடர்பில் இணையக் குற்றப்பிரிவினரிடமும் முறையிடப்பட்டுள்ள நிலையில், அவர்கள் அது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)




தோலிருக்க சுளை விழுங்கிற கனபேர் உந்த ரயில்வே டிப்பார்ட்மெண்டில இருக்கினம் போல். ஏனெண்டல் அங்க நடக்கிற சம்பவங்களைப் பாக்க அப்பிடியான ஆக்களைத்தான் தெரிஞ்சு எடுக்கினமோ எண்டும் சந்தேகமாக் கிடக்கு. கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் ஓடுற ரயிலின்ர எண்ணிக்கை இப்ப ஒண்டாச் சுருங்கிப் போட்டுது. இவ்வளவுநாளும் ஓடின இன்ரர்சிற்றி ரயிலும் இனிமேல் கிழமை நாளில ஓடாதாம். சனி, ஞாயிறுமட்டும் தான் ஓடுமாம். அநுராதபுரத்துக்கு அங்கால உள்ள தண்டவாளத்தை வடிவாப் போட்டு, 5 மணித்தியாலத்தில எல்லா ரயிலும் யாழ்ப்பாணத்தில இருந்து கொழும்புக்குப்போய்ச் சேருற மாதிரிச் செய்யப்போறமெண்டு பெரிய எடுப்புக்காட்டி, ஆறாறு மாதமா ரண்டு கட்ட வேலையும் நடந்தது.பாதையெல்லாம் போட்டு முடிஞ்சுதெண்டு சொல்லி, முதலில பரீட்சார்த்தமா ஒண்டிரண்டு ரயில் ஓடுமெண்டும் அறிவிச்சவை. சரி, நாலைஞ்சு நாள் அப்பிடி பரீட்சார்த்தமா ஓடிட்டு பிறகு பழையமாதிரி யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் 5 ரயில் போகுமாக்கும் எண்டுதான் எல்லாரும் நினைச்சவை. ஆனால் இப்பமாசக்கணக்கா அந்தப் பரீட்சார்த்தமா ஓடின ரண்டு ரயிலும் தான் ஓடிக்கொண்டிருக்குதுகள். அதிலையும் இன்ரர்சிற்றி ரயிலும் இனி கிழமை நாளில ஓடாதெண்டால், இஞ்சையிருந்து கொழும்புக்கு ஒரு ரயில்மட்டும் தான் ஓடப்போகுது. அதுக்கும் ஏதும் வருத்தம் வந்தால், புதுசாப் போட்ட தண்டவாளத்தில பத்தை வளர வேண்டியதுதான்.

உந்த ரயில் திணைக்களத்துக்கு லாபம் கூடக் கிடைக்கிறது யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையில ஓடுற ரயில்களால தான். அப்பிடி தங்கமுட்டை போடுற ரயில்களை ஏன் ஓடவிடாமல் வைச்சிருக்கினம் எண்டு பார்த்தால் அதுக்கு மூண்டு விசயங்கள் கிடைச்சுது. ஒண்டு,அநுராதபுரத்துக்கு அங்கால புதிசாப் போட்ட தண்டவாளவேலையில பெரும் மோசடியாம். அதால அந்தத் தண்டவாளம் ஒழுங்காப் போடுப்படாததாலதான் கனக்க ரயிலை விடப் பஞ்சிப்படுகினமாம். ரண்டாவது காரணம், முதல் யாழ்ப்பாணத்துக்கு ஓடின ரயில்களின்ர இஞ்சின்களை இடைப்பட்ட காலத்தில வேற ரயில்களுக்கு பூட்டி ஓடினவையாம். இப்ப அந்த இஞ்சின்களை திரும்ப யாழ்ப்பாணத்துக்கு ஓடுற ரயில்களுக்கு பூட்டவெண்டு வெளிக்கிட,உள்ளுக்க அங்க கொண்டு போகக் கூடாது எண்டு சண்டையாம். இந்த ரண்டு காரணத்தையும் விட மூண்டாவது காரணம் தான் 'தோலிருக்கச் சுளை விழுங்கிற' ஆக்கள். தண்டவாள வேலை நடந்துமுடியும் மட்டும் யாழ்ப்பாணத்துக்கு ஓடின ரயில்களை ஒவ்வொரு ஸ்ரேசன்களில விட்டிருந்தவை. ஓடாத ரயிலை ஆர் கவனிக்கப் போயினம் எண்ட நினைப்பில,அந்த ரயில்களில இருந்த 'ஏசி', சீற்றுகள், மின்விசிறியள் எண்டு எல்லாத்தையும் சுருட்டிக்கொண்டு போட்டினமாம். அதாலதான் முந்தின மாதிரி அஞ்சு ரயிலையும் விட ஏலாம நிக்கினமாம்.

இப்பிடி ரயிலையே ஆட்டையைப் போட்டவையைக் கண்டுபிடிச்சு, அவையிட்ட இருந்து அந்தச் சாமான்களை வாங்கினால் பிரச்சினை முடிஞ்சிடுமெல்லோ. அங்கதான் இருக்குது சிக்கல். இந்தக் களவுகளை விசாரிச்சுக் கண்டுபிடிச்சு,தண்டனை குடுக்கவேண்டிய பெரிய தலையள்தான்,தங்களுக்கு கீழ வேலை செய்யிற ஆக்களை வைச்சு இந்தச் சாமான்களை தங்கட வீடுவாசல்களுக்கு கொண்டு போனவையாம். அரசாங்கம் ரயிலையே விழுங்கிற இந்தத் திமிங்கிலங்களை என்ன செய்யப்போகுது? பாப்பம்.

padsi@uthayan.com - பட்சி

## அச்சகத் திணைக்களத்தின் இணையத்தளம் முடக்கம்

கொழும்பு, ஜன. 1

அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் ஹேக் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கணினி அவசரகால பதில் குழு தெரிவித்துள்ளது.

அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் ஹேக் செய்யப்பட்டு அதன் தரவுகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் இலங்கை கணினி அவசரகால பதில் குழு தெரிவித்துள்ளது. (ச-இ)

## நஞ்சருந்திய நால்வர் கடந்தாண்டில் சாவு!

யாழ்ப்பாணம், ஜன. 1

யாழ்.போதனா மருத்துவமனையில், நஞ்சருந்திய நால்வர் கடந்த செப்ரெம்பர் வரையான காலப்பகுதியில் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 2024ஆம் ஆண்டு யாழ்.போதனா மருத்துவமனையில் 504 பேர் நஞ்சருந்திய நிலையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் 4 பேர் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளனர் எனயாழ். போதனா மருத்துவமனை வட்டாரம் தெரிவித்துள்ளது. (ச-125)





## யாழ்ப்பாணத்தில் 'இ-பைக்' திட்டம்

யாழ்ப்பாணம், ஜன.1

சேவ்லைப்நிறுவனம் சுற்றுச்சூழல் நிலைபேண் தன்மையை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கையாக பிளாஸ்ரிக் பயன்பாட்டை குறைக்கும் செயற்பாட்டின் கீழ் 'இ-பைக்' திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தத் திட்டத்தில் பிளாஸ்ரிக் மறுசுழற்சியை மேம்படுத்த பிளாஸ்ரிக் கழிவுகளை சேகரிப்பதற்கு வசதியாக 'இ-பைக்' வடிவமைக்கப்பட்டுள்ளது. (ச-25)

## கடந்த ஆண்டில் போதனாவில் 166 இருதய சத்திர சிகிச்சைகள்

யாழ்ப்பாணம், ஜன. 1

2024 ஆம் ஆண்டில் யாழ்.போதனா மருத்துவமனையில் 166 இருதய சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. டிசெம்பர் 31வரையான காலப்பகுதியில் மேற்குறித்த எண்ணிக்கையிலான நோயாளிகளுக்குச் சத்திரச் சிகிச்சையளிக்கபட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரம் தெரிவித்துள்ளது. (ச-125)

# அரச ஊழியர்களுக்கு ரூ. 15,000 வேண்டும்!

கொழும்பு, ஜன.1

அரச ஊழியர்களுக்கு 15 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படவேண்டுமென அரச ஊழியர்களின் தொழிற்சங்கங்களின் அமைப்பாளர் பஸ்நாயக்க தெரிவித்துள்ளார். முன்னைய ஆட்சியில் ரணில் விக்கிரமசிங்க 25 ஆயிரம் சம்பள அதிகரிப்பு வழங்கப்போவதாக உறுதியளித்திருந்தார். ஆனால் 10 ஆயிரம் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்குவதாக அறிவிக்கப்பட்ட போதும் 5 ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப்படுகிறது. மிகுதி நிலுவைப்பணம் ஜனவரி மாதம் வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டிருந்தபோதும் இப்போது 1500 ரூபா மட்டுமே அதிகரிக்கப்படவுள்ளதாக அறிகிறோம். ஆக மொத்தம் 6500 ரூபா தான் வழங்கப்படவுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (ரி-45-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் S.K. தியாகராசா (தியாகு)

(பிரபல புகையிலை வர்த்தகர்)

தோற்றம் 01.01.1943 — மறைவு 01.01.2009

எம் அன்பு நிறைந்த அப்பாவே
ஆலமரம் போல் நீங்கள் வாழ்ந்து - அதில்
இளைப்பாறும் பறவைகள் போன்று
பிள்ளைகளும் வாழ்ந்தோம்
எம்மை எல்லாம் விட்டுச்செல்ல
எப்படி அப்பா மனம் வந்தது
சிறகுகள் உடைந்த பறவைகள்
போன்று இன்று வாழ்கின்றோம்
உம்மை நினைக்காத நேரம் இல்லை
அப்பா எல்லோரையும் மதித்து
நடக்கும் பண்பும் பற்றுடன்
சுற்றத்தவரை அரவணைத்து வாழ்ந்த
சீர்பெற்ற வாழ்க்கை என்றும்எம் வாழ்நாள்
வரை நினைவிருக்கும் அப்பா இன்னொரு
பிறப்பு இருப்பது உண்மையெனில்
நீங்களே வேண்டும் எம் அப்பாவே

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி**

நிரந்த முகவரி:
**தன்னை, களபூமி,**
**காரைநகர்.**

தற்காலிக முகவரி:
**இல.58, மானிப்பாய் வீதி,**
**ஆறுகால் மடம்.**
**077 183 6625**

**உங்கள் நினைவுகளுடன்**
**என்றும்**
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

# மரண அறிவித்தல்

## திருமதி அன்னபூரணம் மாரிமுத்து



**தோற்றம்** 21.04.1942 — **மறைவு** 31.12.2024

யாழ் அராலியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அன்னபூரணம் மாரிமுத்து அவர்கள் 31.12.2024 செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வீரபாகு தங்கமுத்து தம்பதிகளின் அன்புப் புதல்வியும் துரையப்பா, நாகமுத்து அவர்களின் அன்பு மருமகளும் மாரிமுத்து அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வர்களான கதிர்காமு, சின்ராசு, கணபதிபிள்ளை ஆசைமுத்து, இராசம்மா ஆகியோரின் அன்புச்சகோதரியும் நாகமுத்து அவர்களின் பெறாமகளும் சிவநாதன், சுந்தரசிவம், அன்பு மலர், சிவச்செல்வி, செந்தமிழ்ச்செல்வி, ஜெயச்செல்வி, காலஞ்சென்றவர்களான சிற்சபேசன், பாஸ்கரன், ஆகியோரின் பாசமிகு தாயாரும் செல்வராணி, வசந்திராதேவி, தனலட்சுமி, ஜெகநாதன், செல்வம், ரஞ்சித்குமார் மற்றும் காலஞ்சென்ற மகேந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் யோகேஸ்வரன், பிரதீபன், ஸ்ரீசபேசன், ஜீவதாஸ், கிரிசாந்தன், விஜிதா, அஞ்சுகா, கானுஜன், சிவசந்தியா, கீதரன், பவித்திரன், ஜான்சிதா, கஜிதா, தரீனா, கஜீபன், பானுமதி, அனுஷா, சித்திரா, ஷோபனா, வினோத்,நிசாந், நிதர்சன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சஹானா, சிவராஜ் ஆதித்தன், சஹாரிகா, ரோஜித் மிதுஷிக், மிராஜா ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.01.2025) பிற்பகல் 1.00 மணிக்கு அராலி தெற்கு பிள்ளையார் கோவிலடி அன்னாரின் இல்லத்திலிருந்து பூனவடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**மாரிமுத்து குடும்பத்தினர்.**

CS 295691V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


## மாற்றத்துக்கான ஆண்டாக மலரட்டும்

திருப்பங்கள், நெருக்கடிகள், மாற்றங்கள் நிறைந்த ஆண்டாக 2024 கடந்து செல்ல, எதிர்பார்ப்புகளோடு புதிய ஆண்டு ஒன்றுக்குள் நுழைகின்றோம். கடந்த சில ஆண்டுகள் இலங்கைக்கு - நாட்டு மக்களுக்கு ஏமாற்றமளிப்பவையாகவே கடந்து சென்றிருக்கின்றன. பொருளாதார நெருக்கடி, அரசியல் குழப்பங்கள் நிறைந்த ஆண்டுகளாகவும், அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நகர்த்தவே சிரமப்படும் ஆண்டுகளாகவுமே அவை பதிவாகியிருக்கின்றன. இலங்கையில் முன்னெப்போதும் இல்லாதவகையில் இப்போது அரசியல் மாற்றம் ஒன்று உருவாகியிருக்கின்றது. வழக்கமான அரசியல் தீர்மானத்தில் இருந்து விலகி மக்கள், நாட்டின் முன்னேற்றம் தொடர்பாகச் சிந்தித்து புதிய அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றார். மலிந்திருக்கும் ஊழல், மோசடிகளை இல்லாதொழித்து நாட்டை சுபீட்சத்துக்கான வழியில் கொண்டு செல்ல வேண்டும் என்ற மக்களின் மனவிருப்பே அரசியலில் பழம் தின்று கொட்டை போட்ட அரசியல்வாதிகள் அனைவரையும் வீட்டுக்கு அனுப்பி, தேசிய மக்கள் சக்தியை அதிகாரத்தில் இருத்தியிருக்கின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நாட்டின் நலன்கருதி செயலாற்றினால் புதிய ஆண்டில் வியப்பான மாற்றங்களை எதிர்பார்க்கலாம். எதிர்வரும் ஆண்டுகளில் நாடு சுபீட்சத்தை நோக்கிப் பயணிப்பதற்கான வழி ஏற்படலாம். கடந்தகால அரசியல்வாதிகளைப் போன்று தேர்தலை - வாக்குகளைக் கணக்குவைத்து முடிவுகளை எடுக்காது மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை நோக்கி தற்போதைய அரசாங்கம் பயணிக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு. தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்துக்கு மக்கள் வழங்கிய ஆணையை செயற்படுத்த வேண்டிய கடமை இருக்கின்றது. நாட்டில் மலிந்திருக்கும் ஊழல், மோசடிகளை இல்லாதொழிக்கும் அதேநேரம், கடந்தகாலங்களில் ஊழல், மோசடிகளில்ஈடுபட்டுமக்கள்பணத்தை ஏப்பமிட்டவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டியதும் தற்போதைய அரசாங்கத்தின் முன்னுள்ள முதன்மைப் பணியாகும். அதேநேரம், நாட்டின் சிறுபான்மை மக்களின் நீண்டகால - நியாயமான கோரிக்கைகளையும் தற்போதைய அரசாங்கம் புறமொதுக்கிவிட முடியாது.

நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிட்டும் என்று ஒவ்வொரு ஆண்டும் நாட்டின் சிறுபான்மை மக்களான தமிழ் மக்கள் எதிர்பார்த்திருந்து ஏமாற்றப்பட்டிருக்கின்றார்கள். இலங்கைக்கு சுபீட்சமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதும் மிகமுக்கியமானது. தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாது - தமிழ் மக்கள் நாட்டில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்காது நாட்டின் பொருளாதாரத்தை மேலுயர்த்துவது என்பது பகற்கனவாகவே இருக்கும். ஊழல் மோசடிகளை முடிவுக்குக் கொண்டு வருதையும், தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக்கொடுப்பதையும் இரு கண்களைப் போன்று கருதி தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செயற்பட்டால் மட்டுமே இந்து சமுத்திரத்தின் முத்தாக இலங்கையை மீண்டும் மாற்ற முடியும்.

புதிய ஆண்டு தமிழ் மக்களினதும், நாட்டு மக்களினதும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் ஆண்டாகவும், மக்கள் மனங்களில் மகிழ்ச்சியை நிறைக்கும் ஆண்டாகவும் இருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கும் அதேவேளை, நாட்டில் ஏற்பட வேண்டும் என்று எதிர்பார்க்கும் மாற்றத்தை நாம் ஒவ்வொருவரும் எம்மில் ஏற்படுத்திக்கொள்ளும் ஆண்டாகவும் இந்த ஆண்டு அமையட்டும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uth
விளம்பரம் : advt@uth




நாளொரு நல்வார்த்தை

தோல்விகளுக்கு இடையில்தான் வாய்ப்புகள் மறைந்திருக்கின்றன
அதனால் தோல்விகளைக் கண்டு அஞ்சாதே

- ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் -




## சிறுநீரக நோயாளர்களுக்கு உயர்கின்றது கொடுப்பனவு

கொழும்பு, ஜன. 1

சிறுநீரக நோயாளர்களுக்கு வழங்கப்பட்டுவரும் 7 ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவை 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று கிராம அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு அறிவித்துள்ளது.

டிசெம்பர் மாதத்தின் பின்னர் கொடுப்பனவு குறைக்கப்படவுள்ளதாக அண்மைக்காலமாகத் தகவல்கள் வெளியான நிலையில், அந்தத் தகவல்கள் பொய்யான தகவல்கள் என்றும், ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் என்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு தெரிவித்துள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய செயலகத்தின் தகவல்களின்படி, நாட்டில் தற்போது 47 ஆயிரத்து 244 சிறுநீரக நோயாளிகள் உள்ளனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-இ)



## கஞ்சாவுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 1

பொன்னாலையில் கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார். வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனையிலேயே 4 கிராம் மற்றும் 800 மில்லிகிராம் கஞ்சாவுடன் 21 வயதான குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேக நபருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருவதாக தெரிவித்தனர். (ச-125)

## தவறான முடிவெடுத்த 20 பேர் உயிர் தப்பிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 1

செப்ரெம்பர் வரையான காலப்பகுதியில் 26 பேர் தவறான முடிவெடுத்த நிலையில் யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர். அவர்களில் 20 பேர் சிகிச்சைகளினூடாக உயிர் தப்பியுள்ளனர்.

இதேவேளை ஆறு பேர் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளனர் என யாழ்.போதனா மருத்துவமனை தெரிவித்துள்ளது. (ச-125)

## அதிபர்களின் ஊதியம் உயர்த்தப்பட வேண்டும்

கொழும்பு, ஜன. 1

பாடசாலை அதிபர்களுக்கான வருடாந்த சம்பள அதிகரிப்பு 930 ரூபாவிலிருந்து ஆயிரத்து 650 ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டுமென பாடசாலை அதிபர்கள் சங்கத்தலைவர் சுஜீஸ்வர விமலரத்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தமது கோரிக்கைகளில் ஒரு பகுதியைத்தான் நிறைவேற்றியுள்ளது எனவும் 2025 வரவு - செலவுத்திட்டத்தில் தமது வருடாந்த சம்பள அதிகரிப்பு உள்வாங்கப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-25,6)

## சிறுவர்களுக்குத் தடை வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, ஜன. 1

2025 ஜனவரி முதலாம் திகதி முதல் 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் சிறுவர்களை உணவுப் பொருள்களின் விளம்பரங்களில் இடம்பெறச் செய்வது தடைசெய்யப்படும் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பிலான வர்த்தமானி வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவால் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, 2022 பெப்ரவரியில் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருந்த விதி முறைகள் மற்றும் 2022 இல் வெளியிட்ட வர்த்தமானியில் உள்ளடக்கப்பட்டிருந்த விதிமுறைகள் என்பன தற்போது புதிய வர்த்தமானியின் ஊடாக திருத்தப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-இ)

நாளை

வியாழக்கிழமை - மார்கழி - 19

02.01.2025

சுபநேரம் : 10.30 - 11.30

ராகுகாலம் : 01.30 - 03.00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு

- சர்ப்த், சுண்டல் கடை நடாத்தக்கூடிய இரண்டு வண்டில் வாடகைக்கு உண்டு.
- A9 வீதிக்கு அருகாமையில் (மிருசுவில்) சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு / குத்தகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கு உகந்தது. (CS/57080) JK

076 928 6541

## பணிப்பெண் தேவை

யாழ். நகரப் பகுதியிலுள்ள வீடொன்றிற்கு தங்கி நின்று பணிபுரிவதற்கு பணிப்பெண் தேவை. (45 வயதிற்குட்பட்டோர்)
(CS/57082) J-1

077 050 8714, 077 986 3097, 076 823 7155


# திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன. 1

சாவகச்சேரி நகரப் பேருந்து நிலையத்துக்கு அருகிலுள்ள புராதன சிவன் கோவிலில் இன்று காலை தொடக்கம் திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது. சாவகச்சேரி சத்திய கோட்டத்தினர் வருடாவருடம் கோவிலில் திருவாசக முற்றோதல் நடத்தி வருகின்றனர். திருவாசக முற்றோதலில் அடியார்களை பங்குபற்றுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ச-9)


## பொது மக்களுக்கான அறிவித்தல்

### கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு

### 2025 ஆம் ஆண்டிற்கான குத்தகை வழங்குவதற்கான பகிரங்க ஏலம் கூறல்

கரைதுறைப்பற்று பிரதேசசபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் சந்தைகள் மற்றும் இறைச்சிக் கடைகள் என்பனவற்றை 2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி முதல் டிசம்பர் மாதம் 31ம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான ஏலம் கோரப்படுகின்றது.

பற்றுச்சீட்டு வழங்கப்படும் காலம் :- 12.12.2025. மு.ப 9.00 மணி தொடக்கம் 19.12.2024 பி.ப 02.00 மணிவரை
(அலுவலக நாட்களில் மட்டும்)

ஏலம் கூறப்படும் இடம் :- கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகம்

ஏலம் கூறப்படும் நேரம் :- 20.12.2024 முற்பகல் 10.30 மணி

| இல | விபரம் | கேள்விப்படிவக் கட்டணம் (VAT,NB) நீங்கலாக | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் ரூபா | கடைக்குரிய மாதாந்த வாடகைத் தொகை ரூபா | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (VAT,NB) நீங்கலாக |
|---|---|---|---|---|---|
| | முல்லைத்தீவு உப அலுவலகம் | | | | |
| 1 | முல்லைத்தீவு பொதுச்சந்தை | 2,000.00 | **33,000.00** | - | 1,092,150.00 |
| 2 | முல்லைத்தீவு மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | **56,800.00** | 5,000.00 | 1,890,000.00 |
| 3 | முல்லைத்தீவு கருவாட்டுக்கடை | 2,000.00 | **2,500.00** | 5,000.00 | 81,090.00 |
| 4 | முல்லைத்தீவு சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை | 2,000.00 | **14,500.00** | 4,500.00 | 475,200.00 |
| | முள்ளியவளை உப அலுவலகம் | | | | - |
| 5 | தண்ணீரூற்று பொதுச்சந்தை | 2,000.00 | **92,000.00** | - | 3,060,900.00 |
| 6 | வற்றாப்பளை பொதுச்சந்தை | 2,000.00 | **1,500.00** | - | 37,800.00 |
| 7 | கேப்பாப்பிலவு பொதுச்சந்தை | 2,000.00 | **200.00** | - | 4,500.00 |
| 8 | முள்ளியவளை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | **32,500.00** | 3,150.00 | 1,080,000.00 |
| 9 | தண்ணீரூற்று மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | **73,200.00** | 2,700.00 | 2,439,990.00 |
| 10 | தண்ணீரூற்று கோழிஇறைச்சிக்கடை | 2,000.00 | **63,800.00** | 2,700.00 | 2,124,990.00 |
| 11 | தண்ணீரூற்று கருவாட்டுக்கடை | 2,000.00 | **1,000.00** | 2,700.00 | 22,950.90 |
| 12 | தண்ணீரூற்று சந்தை வாகனத்தரிப்பிடம் | 2,000.00 | **1,200.00** | - | 32,400.00 |
| | கொக்கிளாய் உப அலுவலகம் | | | | - |
| 13 | கொக்குத்தொடுவாய் பொதுச்சந்தை | 2,000.00 | **200.00** | - | 2,700.00 |
| 14 | கொக்கிளாய் கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | **14,500.00** | 1,000.00 | 473,310.00 |
| 15 | கொக்கிளாய் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | **17,100.00** | 1,000.00 | 567,000.00 |
| | முள்ளிவாய்க்கால் உப அலுவலகம் | | | | - |
| 16 | முள்ளிவாய்க்கால் பொதுச்சந்தை | 2,000.00 | **200.00** | - | 2,551.50 |
| 17 | முள்ளிவாய்க்கால் கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | **200.00** | 1,000.00 | 3,600.00 |
| 18 | முள்ளிவாய்க்கால் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | **3,000.00** | 1,000.00 | 93,150.00 |
| | செம்மலை உப அலுவலகம் | | | | - |
| 19 | அளம்பில் பொதுச்சந்தை | 2,000.00 | **400.00** | - | 9,900.00 |
| 20 | குமுழமுனை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | **3,500.00** | 1,750.00 | 112,011.30 |
| 21 | செம்மலை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | **300.00** | 1,000.00 | 8,100.00 |

**ஏலத்தில் பங்குபற்றுவதற்கான நிபந்தனைகள்**

1. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக் கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது. முதலாம் சித்திகர கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியையும் வாடகை இருப்பின் வருட வாடகைத் தொகையின் 1/3 பகுதியையும் 2024.12.23 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் குத்தகை. வாடகை வைப்பாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ள வேண்டும். தவறின் அடுத்த தர சித்திதாரர்களுக்கு தொலைபேசி மூலம் தகவல் வழங்கப்படும். அவர்கள் பெற்றுக் கொள்வதாயின் சம்மதக் கடித்தினை 2024.12.24 பிற்பகல் 3.30 மணிக்கு முன்பு சமர்பிக்கப்பட வேண்டும் . அவர்கள் குத்தகை மற்றும் வாடகை இருப்பின் குத்தகை. வாடகைத் தொகையின் 1/3 பகுதியை 2024.12.26 ஆம் திகதி மு.ப 02.00 மணிக்கு முன்னர் குத்தகை .வாடகை வைப்பாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ள வேண்டும். அத்துடன் மிகுதித் தொகையினை 8 சமபங்குகளாக பிரித்து மாசி தொடக்கம் புரட்டாதி வரையான காலப்பகுதிக்குள் அம் மாதம் இறுதித் திகதிக்கு முன்னைய வேலைநாட்களில் செலுத்த வேண்டும். தவறுமிடத்து மாதக் கட்டணத் தொகையின் 10% தண்டமும் மேலதிகமாக அறவிடப்படும். மேலதிக விபரத்தினை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
2. கேள்விப்பத்திரத்தினை பெற விரும்புவோர் வடக்கு மாகாண எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்திய பிரதி. தாம் வதியும் கிராம சேவையாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவிடத்தின் வதிவிட சான்றிதழ் மூலப்பிரதி ஆகியவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.
3. ஏலத்தில் பங்குபற்றும் ஏலதாரர் தங்களால் விண்ணப்பிக்கப்பட்ட ஏலத்தில் மட்டும் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர்.
4. ஏனைய நிபந்தனைகள் உதயன் நாளிதளின் 12.11.2024 ஆம் திகதிய பத்திரிகையில் உள்ள எமது சபை கோள்வி கோரல் நிபந்தனைகளே அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளவும்.

செயலாளர்,
கரைதுறைப்பற்று பிரதேசசபை. முல்லைத்தீவு.

(GR/44016) JK

11.12.2024


# மரக்குற்றிகள் கடத்தல் பரந்தனில் முறியடிப்பு

கிளிநொச்சி, ஜன. 1

விசுவமடுவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு முதிரை மரக் குற்றிகளை சட்டவிரோதமாக ஏற்றிவந்த சிறியரக பாரவூர்தியின் சாரதியைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். கிளிநொச்சி மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய பரந்தன் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை வாகனத்தை மறித்து சோதனையிட்டபோது சுமார் 5 இலட்சம் பெறுமதியான 31 மரக்குற்றிகளுடன் விசுவமடுவைச் சேர்ந்த சாரதி கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிலைப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-25,28)

# மீனவர் பிரச்சினைகள் யாழில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன.1

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்துக்கும் வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்துக்கும் இடையிலான சந்திப்பு யாழ். மாவட்டத்தில் அமைந்துள்ள தனியார் விடுதியொன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. சந்திப்பில் கடற்றொழில் அமைச்சால் முன்மொழியப்படவுள்ள புதிய சட்டவரைபை இடைநிறுத்தல், தமிழக அரசியல் தலைமைகளுடன் வடகிழக்குத் தமிழ் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை முன்னெடுப்பதனை வலியுறுத்தல், தேசிய மக்கள் சக்தியால் மீனவர் பிரச்சினை தொடர்பில் கோரப்பட்ட கால அவகாசம் ஜனவரி மாதத்துடன் நிறைவடைதல், 2025 வடமாகாண மீனவர்களின் வாழ்வியல் செயற்திட்டங்கள், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினை சந்திப்பதற்கான தீர்மானம் ஆகிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (ச-45-125)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## "சிவனருட்சீலர்" "ஆன்மீகப் பேரொளி"

## அமரர் செல்லையா ஜெயபாலசிங்கம்



தோற்றம் 09.11.1951 — மறைவு 29.12.2024

சரவணையை பிறப்பிடமாகவும் மணல்தறை வீதி கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட Evershine கல்விக்குழுமத்தின் ஸ்தாபகரும், நிர்வாகத் தலைவருமாகிய "சிவனருட்சீலர் ஆன்மிகப் பேரொளி" செல்லையா ஜெயபாலசிங்கம் அவர்கள் கடந்த 29.12.2024 ஞாயிற்றுக்கிழமை சீரடி இந்தியாவில் சிவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-பாக்கியலக்சுமி தம்பதியினரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற நாகமணி-சிந்தாமணி தம்பதியினரின் அன்பு மருமகனும் சறோஜினியின் (அதிபர்-Evershine Kids World) அன்புக் கணவரும் சிந்துஜா (விரிவுரையாளர், தேசிய கல்வியற்கல்லூரி), மதுரிகா (பணிப்பாளர்-Evershine Kids World), திறோஜன் (புவித் தொழில்நுட்பவியல் பொறியியலாளர்-கனடா), ஜனுசன் (கட்டமைப்புப் பொறியியலாளர்-Structural Engineers and Design Consultants) ஆகியோரின் அன்புத் தந்தையும் கௌசிகன் (ஆசிரியர்), சுஜீவன் (சிரேஷ்ட மின் பொறியியலாளர், இலங்கை விமானப்படை), சுதர்ஷிகா (மென் பொறியியலாளர்-கனடா), சிவநங்கை (அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அஷ்வினா, அக்ஷரன், அடெலியா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற பரஞ்சோதி, செல்வராணி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற சரஸ்வதி, சண்முகாநந்தம் (கனடா), வசந்தகுமாரி, வசந்தகுமார் (பிரான்ஸ்), ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற கணநாதன், தயாநிதி (கனடா), உதயகுமார், கிருபா (பிரான்ஸ்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மணல்தறை வீதி கந்தர்மடத்தில் அவரின் இல்லத்தில் நாளை (02.01.2025) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 1.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல-61
மணல்தறை வீதி,
கந்தர்மடம்.

தகவல்:
குடும்பத்தினர்
021 222 3726

(CS 29554) V-1

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





**தம்பிப்பிள்ளை கணபதிப்பிள்ளை**
தோற்றம் 17.08.1935 — மறைவு 30.06.2023

**கணபதிப்பிள்ளை மகாமணி**
தோற்றம் 28.02.1945 — மறைவு 13.01.2024

வாழ்க்கை எனும் பாதையிலே
எம்மோடு பயணித்த
எம் தெய்வங்களே
உங்கள் நினைவுகள்
எம்மைவிட்டு மறையாது

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அச்சுவேலி தெற்கு,
விக்னேஸ்வரா வீதி,
அச்சுவேலி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CS/57085) JK

# மரண அறிவித்தல்

மலர்வு 02 04 1937 — உதிர்வு 29 12 2024



## திரு.ஆறுமுகம் சின்னையா சுப்பிரமணியம்

(இளைப்பாறிய அரச நிர்வாக அலுவலர் தரம் 1, அகில இலங்கை சமாதான நீதவான்)

கைதடி வடக்கை பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.ஆ.சி.சுப்பிரமணியம் (இளைப்பாறிய அரச நிர்வாக அலுவலர், சுகாதார திணைக்களம், யாழ்ப்பாணம் மற்றும் அகில இலங்கை சமாதான நீதவான்) அவர்கள் கடந்த (29.12.2024) ஞாயிற்றுக்கிழமை காலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - தங்கமுத்து தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற கந்தையா - தெய்வநாயகி தம்பதியினரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும் பிரபாகரன், வர்மா, ரேணுகா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் வைதேகி, தட்சாயினி, ஹரிதாஸ் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கருணிகா, ஈஷா ஆகியோரின் அன்புப்பேரனும் செல்வராசாவின் அன்புச்சகோதரரும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற புவனேஸ்வரி, ஆறுமுகம், காலஞ்சென்ற வீமராஜன், குலராஜன், பாலராஜன், ஆனந்தராஜன், ஜெகராஜா, விக்கினேஸ்வரி, விக்னராஜா மற்றும் தனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (02.01.2025) வியாழக்கிழமை காலை 8 மணி முதல் பொரளை ஜெயரட்ன மலர்ச் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 2 மணியளவில் இறுதிக்கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு, பொரளை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
தொடர்புகளுக்கு : 0112587975

(CR/44017) JK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச சபை
# නල්ලූර් ප්‍රාදේශීය සභාව
# NALLUR PRADESHIYA SABHA

## பொது அறிவித்தல் - 2025

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்களும் வர்த்தக நிலைய உரிமையாளர்களும் அரச தனியார் நிறுவனங்களின் தலைவர்களும் 2025.01.01 ஆம் திகதி முதல் எமது பிரதேச சபையால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளையும் அறிவித்தல்களையும் பின்பற்றி சபையின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**01. ஆதன வரி**

2025ம் ஆண்டுக்கான ஆதன வரியினை தங்களுக்குரிய உப அலுவலகத்தில் அதாவது ஆடியபாதம் வீதி திருநெல்வேலியில் அமைந்துள்ள நல்லூர் அலுவலகத்திலும் குளப்பிட்டி - ஆனைக்கோட்டை வீதி கொக்குவிலில் அமைந்துள்ள கொக்குவில் உப அலுவலகத்திலும் செலுத்தி சபையின் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வரியிருப்பாளர்களை கேட்டுக் கொள்கின்றேன். இவ் ஆதனவரியை 2025.01.31ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோர் ஆண்டுக்கான மொத்த வரியில் 10% கழிவினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு ஒவ்வொரு காலாண்டிற்குரிய வரியை குறித்த கந்தாயத்தின் முதல் மாதம் முடிவதற் குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதன வரியை செலுத்த தவறின் விறாந்துக் கட்டணமாக (தண்டம்) வெற்றுக்காணி அல்லது வதிவிட ஆதனங்களுக்கு 15% உம் ஏனைய ஆதனங்களுக்கு 20% உம் ஆதன வரியுடன் சேர்த்து மேலதிகமாக அறவிடப்படும். எனவே குறித்த ஆதன வரிகளை 2025.01.31ஆம் திகதிக்கு முன் எமது உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**02. ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்தல்**

எமது சபை நிர்வாகத்திற்கு உட்பட்ட ஆதனங்களை கொள்வனவு செய்பவர்கள் மற்றும் ஏற்கனவே ஆதன உடமையினைக் கொண்டுள்ள போதிலும் எமது சபையின் ஆதன இடாப்பில் பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்கள் எமது உப அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு உரிய நடைமுறையினை பின்பற்றி பெயர் மாற்றத்தினையும் ஆதனத்தில் பௌதிக மாற்றம் ஏற்படுத்தினால் ஆதன பிரிவிடுகை மாற்றத்தினையும் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**03. 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைச் சட்டம் மற்றும் தொடர்புடைய ஏனைய சட்டங்களின் கீழ் கட்டுமானங்களிற்கான அனுமதிப் பத்திரம் வழங்கல்**

i. எமது நிர்வாகத்திற்குப்பட்ட பிரதேசத்தில் கட்டடங்கள், எல்லைச்சுவர், எல்லைத்தூண்கள், தொலைத் தொடர்பு கோபுரங்கள், மலசல கூடங்கள், குழாய் கிணறுகள் போன்றவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது பழைய கட்டடத்தினை திருத்துதல் வேலை செய்வதாயின் பிரதேசசபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து உரிய அனுமதி பெற்ற பின்னரே அமைக்கப்படல் வேண்டும். தவறின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

ii. புதிய கட்டட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் போது மழை நீர் சேகரிப்பிற்கான கட்டுமானங்கள் கட்டாயம் அமைக்கப்படுதல் வேண்டும்

iii. புதிய கட்டடம் அமைப்பதற்கு உரிய அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியாகாதவிடத்து உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதியைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

iv. கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேசசபையின் உரிய உப ஆலுவலகங்களுக்கு கட்டடம் பூர்த்தி செய்தமை தொடர்பில் அறிவித்து உரிய கட்டணத்தைச் செலுத்தி அமைவுச் சான்றிதழைப் (COC) பெற்றுக் கொண்ட பின்னரே கட்டடத்தினை பயன்படுத்துதல் வேண்டும். பகுதியாக பூரணப்படுத்தியும் அமைவுச்சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடியும். அமைவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாமல் கட்டடத்தினை பயன்படுத்தினால் கட்டுமான ஒழுங்கு விதிகளிற்கமைய தண்டப்பணம் செலுத்தநேரிடும்.

v. சபை எல்லைக்குள் குழாய்க் கிணறுகள் அமைப்பவர்கள் உரிய விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து சபையின் அனுமதி பெற்று அமைத்தல் வேண்டும்.

vi. பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக சபை அனுமதியின்றி வீதியோரங்களில் அமைக்கப்படும் நிரந்தர மற்றும் தற்காலிக அலங்கார அமைப்புக்கள் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளன.

**04. சூழல் பாதுகாப்பு உரிமம்**

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 1980ம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்பு சட்டத்தின் 23(அ) எனும் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் அடிப்படையில் நல்லூர் பிரதேச சபையின் நிர்வாக பிரதேசத்தில் 2264/18 இலக்க 2022.01.27 ஆம் திகதிய அதி விசேட வர்த்தகமான பத்திரிகையில் விதந்துரைக்கப்பட்ட(ஈ) பிரிவிற்கமைய வியாபாரம் அல்லது தொழில்களிற்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படுகின்ற பொறுப்பு சபைக்கு வழங்கப் பட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினை பெற்றுக் கொள்ளவும். ஏற்கனவே உரிமத்தை பெற்றுக் கொண்டவர்கள் உரிமம் காலாவதியாகி இருப்பின் அதனை புதுப்பித்துக் கொள்ளவும். வலுவில் உள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் இல்லாமல் மேற்குறிப்பிட்ட தொழில்களை நடாத்தினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு தண்டப்பணமும் அறவிடப்படும்.

**05. வியாபார உரிமம் மற்றும் அனுமதிப்பத்திரம் 2025**

இப் பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருள்களை விநியோகிப்போர் 2025ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதிக்குள் உரிய விண்ணப்பங்களை கொக்குவில், நல்லூர் ஆகிய உப அலுவலகங்களில் பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து 2025.03.31ஆம் திகதிக்கு முன்னர் உரிய கட்டணங்களை செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை (Trade license) பெற்றுக்கொள்ளல் வேண்டும். 2025.03.31ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரம் அல்லது வியாபார வரியைச் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது தகுதி வாய்ந்த நீதி மன்றம் ஊடாக உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைக் கவனத்திற்கொள்ளவும்

**06. துவிச்சக்கர வண்டி உரிமம்**

துவிச்சக்கர வண்டிகள் வைத்திருப்போர் 2025.03.31ஆம் திகதிக்கு முன் உரிய உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி 2025ம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

**07. மிருகங்களுக்கான உரிமம்**

வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 2025.03.31ஆம் திகதிக்கு முன் உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி 2025ஆம் ஆண்டுக்கான மிருக உரிமங்களைப் பெற்றுக் கொள்ளவும்

**08. விளம்பரங்கள் அமைத்தல் அல்லது காட்சிப்படுத்தல்**

பிரதேசசபை எல்லைக்குள் வர்த்தக நிலையங்களில் அல்லது பொது இடங்களில் அமைக்கப் படும் விளம்பரப் பலகைகளுக்கு பிரதேசசபையின் அனுமதியைப் பெற்றே விளம்பரங்களைக் காட்சிப்படுத்த வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் அனைத்திற்கும் எதிர்வரும் ஜனவரி மாதம் 31 ம் திகதிக்கிடையில் உரிய முறையில் விண்ணப்பித்து அனுமதி பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். அனுமதி பெறப்படாது காட்சிப்படுத்தப்பட்டுள்ள விளம்பரங்கள் யாவும் 2025.02.01ஆம் திகதியிலிருந்து பிரதேச சபையினால் எந்த வித முன்னறிவித்தல் ஏதுமின்றி அகற்றப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**09. வீதி ஒழுங்கும் தெருவோர வியாபாரமும்.**

நல்லூர் பிரதேச சபையின் எல்லைப் பகுதிகளில் வீதி ஒழுங்கைப் பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. மேலும் அதிகரித்தபோக்குவரத்து காரணமாக விபத்துக்களை தவிர்க்கும் முகமாக வியாபார நிலையங்களிற்கு முன்னால் வாடிக்கையாளர் வாகனத்தரிப்பிடத்திற்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் மற்றும் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது. காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

எனவே இவ்விடயங்களில் அக்கயைுடன் அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களை கேட்டுக்கொள்கின்றேன். மேலும் பொது மக்கள் வீதி போக்குவரத்துக்கு இடையூறாக வீதி ஓரங்களில் கல். மண். சல்லி போன்ற கட்டடப்பொருட்கள் சேமித்துக் கொள்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றேன். வீதியோர பெட்டிகடைகள் மற்றும் தற்காலிக வியாபாரங்கள் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளன. நடமாடும் வியாபாரங்களிற்கு மாத்திரம் அனுமதி வழங்க பரிசீலிக்கப்படும். அத்தோடு சுகாதார பிரிவினரின் சிபாரிசு பெறப்படாத மற்றும் அனுமதி பெறப்படாத நடைபாதை வியாபாரம் நடமாடும் சுண்டல். சோளம் மற்றும் சிற்றுண்டி விற்பனைக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. இவ் அறிவித்தலை மீறி செயற்படுபவர்களது வியாபார பொருட்கள் பிரதேச சபை உடனடியாக அகற்றப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**10. பொதுச் சுகாதாரத்தைப் பேணுதல்**

பராமரிப்பு இன்றி பற்றைகளாக காணப்படும் காணிகளின் காணி உரிமையாளர்களிற்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவே பற்றைகளாக உள்ள காணிகள் உடனடியாக துப்புரவு செய்யப்படல் வேண்டும் என்பதுடன் இதனை மேற்கொள்ள தவறுபவர்களது துப்புரவு செய்யப்படாத ஆதனங்கள் பிரதேச சபையால் தற்காலிகமாக பொறுப்பேற்கப்பட்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக வட்டார ரீதியான கழிவுப்பொருட்கள் சேகரிப்பு நிலையங்களாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்படும். மேலும் உணவு வகைகளை கையாளும் வர்த்தக நிலையப் பணியாளர்கள் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் அறிவுறுத்தலிற்கமைய சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதுடன் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.

**11. கழிவுப்பொருட்கள் சேகரிப்பு முறை.**

1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் பொது மக்களினால் தரம்பிரித்து வழங்கப்படுகின்ற சமயலறைக் கழிவுகள் மட்டும் இலவசமாக அகற்றுவதற்கு சபையால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் ஏனைய கழிவுகள் யாவும் கட்டணம் செலுத்தியே அகற்றப் படுதல் வேண்டும். தரம் பிரித்து வழங்கப்படாத கழிவுப்பொருட்கள் பிரதேச சபையால் அகற்றப்பட மாட்டாது என்பதுடன் அவற்றினை வீதிகளில் வீசுவோர் மீது உரிய கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் அறியத்தருகின்றோம். மேலும் உணவகங்கள் வர்த்தக நிலையங்கய். ஹொட்டல்கள். வீடுகளை தங்குமிடங்களாக வாடகைக்கு வழங்கியுள்ளோர். அரச. தனியார் நிறுவனங்கள். பாடசாலைகள் மற்றும் அல்லது பொது அமைப்புக்கள் **தங்கள் நிறுவன கழிவுகளை உரிய முறையில் கொள்கலன்களில் சேகரித்தல் கட்டாயமானது** என்பதுடன் அவற்றினை அகற்றுவதற்காக பிரதேச சபையில் உரிய பதிவுகளை மேற்கொண்டு உரிய கட்டணத் துடனான கழிவகற்றல் சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் குறித்த பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் தங்களது நிறுவன கழிவகற்றல் முறையினை பிரதேச சபைக்கு எழுத்து மூலம் வெளிப்படுத்தி அறியத்தரப்படல் வேண்டும். இந்நடைமுறைகளை பின்பற்ற தவறுவோர் மீது உடனடி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**12. டெங்கு நோயின் தாக்கத்தை கட்டுப்படுத்தல்**

நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக பிரதேச சபையால் மேற்கொள்ளப்படும் சகல நடவடிக்கைகளிற்கும் பொதுமக்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்கள் தங்களது பூரண ஒத்துழைப்பினை வழங்குதல் வேண்டும். அத்துடன் ஒவ்வொரு குடியிருப்பாளர்களும் தங்களது வீடுகள் மற்றும் வீட்டு சுற்றாடலில் நீர் தேங்கி நுளம்பு பெருகுவதற்கு ஏதுவான சிறிய மற்றும் பெரிய அளவிலான கொள்கலன்களை சோரித்து பிரதேச சபையின் கழிவகற்றல் வாகனங்களில் ஒப்படைக்க முடியும். இவ் அறிவுறுத்தலை மீறி நுளம்பு பெருக்கத்திற்கு ஏதுவாக சுற்றாடலை வைத்திருப்போர் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**13. பொதுச் சந்தை**

எமது பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான விற்பனை நடைமுறை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறும். நிலக்கீழ் விளைச்சல் பொருட்கள் தவிர்ந்த ஏனைய மரக்கறிகளுக்கு கழிவுமுறை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது என்பதும் அறியத் தரப்படுகின்றது. அத்துடன் எந்தவொரு உள்ளூராட்சி அதிகார சபைக்கு சொந்தமான பொதுச் சந்தைச் சுற்றாடலில் இருந்தும் 500 மீற்றர் சுற்று வட்டாரத்தில் கடல் உணவுகள். மரக்கறிகள். கிழங்குவகைகள். தேங்காய். இறைச்சி வகை மற்றும் உள்ளூர் உற்பத்தி பழவகைகள் என்பன விற்பனை செய்வது மற்றும் காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. இதனை மீறிச் செயற்படுபவர்கள் மீது தகுதிவாய்ந்த நீதிமன்றம் ஊடாக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**14. இரசாயன மருந்து விசிறிய பழங்கள்**

பொது மக்களுக்கு தீங்கு விளைவிக்க கூடிய முறையில் அனுமதியற்ற நியமங்களை மீறி மருந்து விசிறிய பழங்கள் விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளதுடன் மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**15. கால்நடை வளர்ப்பு மற்றும் கட்டாக்காலிகள்**

பொது மக்கள் தமது கால்நடைகளை கட்டி வைத்து வளர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். இதனை மீறும் சந்தப்பங்களில் பொதுவீதியில் அலைந்து திரியும் கட்டாக்காலிகள் சபையால் பிடிக்கப் பட்டு உரிய சட்டங்களின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**16. கழிவு நீர் வாய்க்கால் பராமரிப்பு**

பகிரங்க வடிகால்கள் மற்றும் வாய்க்கால்களினுள் வீட்டு கழிவு நீர் மற்றும் வியாபார நிலைய கழிவுநீர் உட்பட எந்தவிதமான கழிவு நீரினையும் விடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. இதனை மீறி செயற்படுபவர்கள் மீது உடனடியாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**17. பொதுப்போக்குவரத்துக்கு இடையூறாக பெரும் கட்டுமான பொருட்களை பறித்தல்.**

பொது வீதியில் சபை அனுமதியின்றி கட்டுமான பொருட்கள் சேகரித்து வைத்திருத்தல் உரிய நடைமுறைகளிற்கமைய குறியீடுகள் காட்சிப்படுத்தாது விடல் மற்றும் டெங்கு நோய்க்காவி பரவக்கூடிய ஆபத்தான முறையில் கட்டுமான இடங்களை வைத்திருத்தல் முற்றாக தவிர்க்கப்படல் வேண்டும்.

**18. பாடசாலை ஆரம்பிக்கும் நேரம் மற்றும் முடிவடையும் நேரங்களில் பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக பாரவூர்திகள் பொது வீதியில் பயணிப்பதற்கு தடைவிதித்தல்**

கொக்குவில் சந்தியில் இருந்து அம்மன் வீதி சந்தி வரையான ஆடியபாதம் வீதியில் பாடசாலை ஆரம்பமாகும் காலை 7 - 8 மணி வரையும், அதுபோன்று பாடசாலை நிறைவடையும் மதியம் 12 - 2 மணி ஆகிய நேரங்களில் வீதி விபத்து மற்றும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் நோக்கில் குறித்த வீதியூடாக பாரவூர்திகள் செல்வதனை 2024.08.01 முதல் ஏற்கனவே தடை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டு யாழ் மாவட்ட பாரவூர்திகள் சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது. 2025.01.01 முதல் குறித்த நடைமுறையினை மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேற்படி அறிவுறுத்தல்களை அனுசரித்து நடக்காதோர் மற்றும் அறிவுறுத்தல்களை மீறிச்செயற்படுவோர் மீது வேறு எந்த விதத்திலான அறிவித்தலுமின்றி பிரதேச சபையால் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருவதோடு, **"எமது வருங்கால சந்ததிக்காகவும் பிரதேசத்தினதும் அபிவிருத்திக்காகவும்"** நல்லூர் பிரதேச சபையின் அறிவுறுத்தல்களை அனுசரித்து நடக்குமாறு விடயங்களுடன் தொடர்புடைய அனைவரையும் தயவுடன் வேண்டிக்கொள்கின்றேன்.

**யுகராஜா ஜெனீபன்,**
**செயலாளர்**
**நல்லூர் பிரதேசசபை.**

2025.01.01

(CR/44015) JK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 27 . 10 . 1952

மறைவு 30 . 12 . 2024

## ஏரம்பமூர்த்தி சறோஜினிதேவி

யாழ். புங்குடுதீவு 6 ஆம் வட்டாரம் இறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் இல.412, கே.கே.எஸ். வீதி. யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஏரம்பமூர்த்தி சறோஜினிதேவி அவர்கள் நேற்றுமுன்தினம் (30.12.2024) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு (பொன்னம்பலம் ஆசிரியர்) - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், ஏரம்பமூர்த்தி அவர்களின் அன்பு மனைவியும், வாசுகி (UK) சுபாஸ்கரன் (பிரான்ஸ்), பிரபாகரன் (ஆசிரியர் - மு / உடையார்கட்டு அ.த.க பாடசாலை), காண்டீபன் (UK), தேவகி (ஆசிரியை -யா/ யாழ் இந்து மகளிர் கல்லூரி), காலஞ்சென்ற பார்த்தீபன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ரூபகலா, யசோதா, கயல்நிலா, சுதாகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரவின், மெலானி, நிதிலன், அகிலேஸ், இலக்கியா, புகழ்நிலா, அச்சுதன், அகிலயா, திவ்யன், சைந்தவி, மேகவி, மைவிழி, சதுர்யா, விவேகா, சேரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், புஸ்பவதி (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான திருலோகநாதன் (ஸ்ரீசக்தி ஸ்ரோர்ஸ்), அருணகிரிநாதன் மற்றும் கருணாவதி (கிளி), பவானி (சோதி), சர்வலோகநாதன் (ஜேர்மனி), வைத்தீஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் புஸ்பராணி, சுந்தராம்பாள், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், மகாதேவன் மற்றும் செல்வகலா, யோகராணி ஆகியோரின் மைத்துனியும், சச்சிதானந்தம் (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் - திருகோணமலை), சிவதாசப்பிள்ளை (ஓய்வுபெற்ற தபாலதிபர்), காலஞ்சென்ற வர்களான தங்கவேற்பிள்ளை, கோடிலிங்கப்பிள்ளை மற்றும் சசிதேவி (கனடா), காஞ்சனமாலை (உடையார்கட்டு), சிவாஜி (பிரான்ஸ்) ஆகியோரின் அண்ணியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.01.2025) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

412, K.K.S Road,
Jaffna

தகவல்:
குடும்பத்தினர்

(CS/57089) J-1

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அல்பிறெட் ரவிராஜ்

பிறப்பு 06.10.1994

இறப்பு 01.01.2018

உன் நினைவு கொண்ட எம் குடும்பத்திற்கு
உன்பதில் என்ன கூறப்போகிறாய்?
நீயின்றி கடந்தோடிய வேதனைக் காலங்களை
உன்னுடனான பாசமான காலங்களாக
எப்போது மீட்டுத்தருவாய்?
இன்றும் என்றுமே உன் இழப்பை
ஈடுசெய்யாது தவிக்கின்றோம்
ரவிராஜ்ஜே!

ஈச்சமோட்டை

குடும்பத்தினர்

# குறைந்த செலவில் சுதந்திர தின நிகழ்வு

கொழும்பு, ஜன.1

77ஆவது தேசிய சுதந்திர தின விழாவை கொழும்பு சுதந்திர சதுக்க வளாகத்தில் குறைந்த செலவில் நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாட்டின் பெருமையை வெளிப்படுத்தும் வகையில் இது பெருமையுடனும் கம்பீரத்துடனும் நடைபெற வேண்டும் என பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் சுதந்திர தின விழாவுக்காக அமைச்சு 107 மில்லியன் ரூபாவை செலவிட்டிருந்த நிலையில், இயன்றவரை செலவுகளை குறைத்து இந்த வருட சுதந்திர தின விழா குறித்து கவனம் செலுத்த வேண்டும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திர தின விழாவைக் காண பொதுமக்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

# மஹிந்தவுக்கு ஊடகப் பேச்சாளர்

யாழ்ப்பாணம், ஜன. 1

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தனக்கான ஊடகப் பேச்சாளர் ஒருவரை நியமித்துக் கொண்டுள்ளார்.

அதற்கமைய சட்டத்தரணி ரவீந்திர மனோஜ் கமகே, இனிவரும் காலங்களில் மகிந்த ராஜபக்சவின் ஊடகப் பேச்சாளராக செயற்படவுள்ளார்.

அவருக்கான நியமனம் மகிந்தவின் விஜேராம இல்லத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளதாக மஹிந்த ராஜபக்சவின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

(ச-இ)

# துப்பாக்கியுடன் இருவர் கைது

கொழும்பு, ஜன.1

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகளுடன் சந்தேகநபர்கள் இருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை பேருவளை மற்றும் கிரிபாவ பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பேருவளை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட வளதாராப்பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய சந்தேகநபரும், கிரிபாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வல்பாலுவ பகுதியில் கல்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ-25)

## நாகபூஷணி திருமண சேவை

அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

வைத்தியர், பொறியியளாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு, துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

077 138 7596,
071 999 9306

198, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்

## வெதுப்பகம் வாடகைக்கு வழங்குதல்

வவுனியா உளுக்குளம் பிரதேசத்தில் உள்ள வெதுப்பகம் வாடகைக்கு விடப்பட உள்ளது.

கேள்வி கோரல்கள் 2025.01.17 ம் திகதிக்கு முன் கீழ்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

தலைவர்
வவுனியா தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் வ/து
புகையிரத நிலைய வீதி,
வவுனியா.
024 222 2308

(CR/44014) JK

# மரண அறிவித்தல்



தோற்றம் 20 . 07 . 2005

மறைவு 30 . 12 . 2024

## சிறிகேசவன் ஸ்ரெபிகா

சிறுவிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிறிகேசவன் ஸ்ரெபிகா நேற்று முன்தினம் (30.12.2024) திங்கட்கிழமை அகால மரணமடைந்துள்ளார்.

அன்னார் சிறிகேசவன்-சிவமலர் தம்பதியரின் அன்பு மகளும் சாயுக்தனின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.01.2025) புதன்கிழமை அவரது இல்லத்தில் ஆத்மா சாந்திப் பிரார்த்தனை நடைபெற்று பிற்பகல்04.00 மணியளவில் அளவெட்டி மணற்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு அடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 676 1963

(CS 1683) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எலிக்காய்ச்சல்...

பாட்டுக்குள் வந்துள்ளது. இதுவரை 197 பேருக்கு நோய் நிலைமை அவதானிக் கப்பட்டிருந்த நிலையில், அவர்களில் 75 பேருக்கு எலிக்காய்ச்சல் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனை யிலும், யாழ்ப்பாணம் போதனா மருத்து வமனையிலும் நேற்றிரவுவரை 15 பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர். கடந்த 24 மணித்தியாலங்களில் இருவர் எலிக் காய்ச்சல் அறிகுறிகளுடன் மருத்துவம னையில் சேர்க்கப்பட்டுள்ளனர். எலிக் காய்ச்சல் தொற்றால் இதுவரை 7 இறப்பு கள் பதிவாகியுள்ளன. தற்போது நோய்ப் பரம்பல் படிப்படியாகக் குறைந்து வரு கின்றது. தடுப்பு மருந்து வழங்கும் நடவ டிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன - என்றார். (அ-எ-125)

## பிரபாகரன்...

இது தொடர்பில் பொன்சேகா மேலும் கூறியுள்ளதாவது

"போர் இடம்பெறும் காலப்பகுதியில்கூட மஹிந்த ராஜபக்சவின் உயிருக்கு அச்சு றுத்தல் இருக்கவில்லை. அவரைக் கொலை செய்வதற்கு பயங்கரவாதிகள் முற்படவில்லை. மஹிந்த தனித்துச் சென்றா போர் செய்தார்? இராணுவத் தளபதி என்ற அடிப்படையில் நாம் கட் டளை பிறப்பிக்கவில்லையா?

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்த லுக்கு பிறகு எனக்கான பாதுகாப்பு முழு மையாக நீக்கப்பட்டது. என்னை சிறை யில் அடைத்தனர். அங்கு புலிகளும் இருந்தனர். அப்போது எமக்கு அச்சுறுத் தல் இருக்கவில்லையா?

மஹிந்த ராஜபக்ச மீது புலிகள் ஒருபோ தும் தாக்குதல் நடத்தமாட்டார்கள். 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது பிரபாகரனுடன் பேச்சு நடத்துவது பற்றி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் மஹிந்த குறிப்பிட்டிருந்தார். போரை அனுமதிக்கவில்லை எனவும் கூறியி ருந்தார். எனவே, மஹிந்தவுடன் புலி களுக்கு எவ்வித கோபமும் இல்லை.

நாம் வேண்டாம் எனக் கூறியும், போர் முடிவடைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் அதாவது 2009 ஜனவரி 31, பெப்ரவரி 1 மஹிந்த போர் நிறுத்தத்தை அறிவித்தார். இந்தப் போர் நிறுத்தத்தை அறிவிக்காமல் விட்டிருந்தால் மூன்று மாதங்களுக்கு முன்னரே போர் முடிந்தி ருக்கும்.

இந்தப் போர் நிறுத்தகாலப்பகுதியில் புலி களின் தாக்குதலால் 5 கிலோமீற்றர்வரை பின்நோக்கி வரவேண்டிய நிலை எமது இராணுவத்துக்கு ஏற்பட்டது. பிரபாகரன் உள்ளிட்ட தலைவர்கள் தப்பிச்செல்வதற் காகவே அந்த போர் நிறுத்தம் ஏற்படுத் தப்பட்டிருந்தது. எனவே, மஹிந்த மீது புலிகள் ஒருபோதும் தாக்குதல் நடத்த மாட்டார்கள்.

மிக் விமானத்தைவிடவும் ட்ரோன் விமா னங்கள் விலை அதிகம். அவ்வளவு அதிகம் பணத்தை செலவளித்து மஹிந்த மீது யார் தாக்குதல் நடத்துவார்கள்?" என்றார் பொன்சேகா. (அ-எ-44)

## ரயிலுடன்...

ஒருவர் படுகாயமடைந்துள்ளார். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை யில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுக்காலை மிருசு வில் அரசினர் மருத்துவமனைக்கு முன் பாக உள்ள ரயில் தண்டவாளத்தில் நடந்துள்ளது. தண்டவாளத்தைக் கடக்க முயன்ற கொடிகாமம், தவசிகுளத்தைச் சேர்ந்த பெண்ணே விபத்தில் சிக்கியுள் ளார். காங்கேசன்துறையில் இருந்து அநுராதபுரம் நோக்கிப் பயணித்த ரயிலு டன் மோதியே அவர் விபத்துக்குள்ளாகி யுள்ளார்.

விபத்தில் படுகாயமடைந்தவர் சாவகச் சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப் பட்டுள்ளார்.

இதேவேளை, குறித்த பெண் தவறான முடிவெடுத்து உயிரை மாய்க்கும் நோக் குடனேயே ரயிலுக்கு முன்பாகப் பாய்ந் தார் என்று தகவல்கள் வெளியானபோ தும், அதுகுறித்து உறுதிப்படுத்த முடிய வில்லை. (அ-எ-159)

## மண்ணெண்ணெய்...

வகையில் மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 5 ரூபாவால் குறைக்கப் பட்டுள்ளது. அதன்புதிய விலை 183 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஏனைய எரிபொருள் விலைகளில் எந்த மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை. (அ-எ-இ)

## மயங்கி...

கரந்தன் வீதியைச் சேர்ந்த கிருஷ்ணன் கிருபரஞ்சன் (வயது-38) என்ற குடும் பஸ்தரே உயிரிழந்தவராவார்.

நேற்றுக் காலை மகளை தனியார் கல்வி நிலையத்துக்கு மோட்டார் சைக்கிளில் அழைத்துச் செல்ல ஆயத்தமான அவர், தலைசுற்றுவதாகத் தெரிவித்து கதிரை யில் அமர்ந்தநிலையில் மயக்கமாகி யுள்ளார்.

அதையடுத்து அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண் டுசெல்லபட்ட நிலையில், நேற்று மாலை அவர் உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## தவறான...

உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

இளவாலை, சிறுவிளானைச் சேர்ந்த 19 வயது மாணவி ஒருவரே தவறான முடி வெடுத்து உயிரிழந்துள்ளார்.

நடைபெற்று முடிந்த உயர்தரப் பரீட்சை யில் விஞ்ஞான பிரிவில் பரீட்சைக்குத் தோற்றியிருந்த குறித்த மாணவி, பரீட்சை கடினமாக இருந்தது என மனச் சஞ்சலத்தில் இருந்தார் என்று கூறப்படு கின்றது. இந்தநிலையிலேயே அவர் நேற்றுமுன்தினம் இரவு வீட்டில் எவரும் இல்லாதநிலையில் தவறான முடிவெ டுத்து உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக் கப்படுகின்றது.

இறப்பு விசாரணைகளை நேற்று வலிகா மம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற் கொண்டார். (அ-எ-26)

## உயர்தரப்...

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடத்திய ஊடக சந் திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

'உயர்தரப் பரீட்சை முடிவுகளை இறுதி செய்வதற்கான நிலையான செயன்மு றைக்கு பொதுவாக நான்கு மாதங்கள் எடுக்கும் .அந்த நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எமது நோக் கம் ஏப்ரல் மாதத்துக்குள் முடிவுகளை வெளியிடுவதுதான். அத்தோடு மதிப்பீட் டுக்குத் தேவையான நேரத்தைக் குறைக்க நாம் முயற்சிக்கின் றோம்' என் றும் தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## அநுர...

திகதி வரை நடத்துவதற்கு தீர்மானிக் கப்பட்டுள்ளது.

சபாநாயகர் வைத்தியகலாநிதி ஜகத் விக் ரமரத்ன தலைமையில் நாடாளுமன்றத் தில் நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இது தொடர்பில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கிட் டுச் சட்டமூலம் முதலாவது மதிப்பீட்டுக் காக 2025 ஜனவரி 09ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

இதற்கு அமைய 2025ஆம் ஆண்டுக் கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு (வரவு - செலவுத் திட்ட உரை) பெப்ரவரி 17ஆம் திகதி இடம் பெறவிருப்பதுடன், இரண்டாவது மதிப் பீட்டு விவாதம் பெப்ரவரி 18 ஆம் திகதி முதல் பெப்ரவரி 25 ஆம் திகதி வரை 7 நாட்கள் இடம்பெறவுள்ளது.

அத்துடன் பெப்ரவரி 25ஆம் திகதி பி.ப 6.00 மணிக்கு நிதி ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் இரண்டாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து 2025 ஆம் ஆண் டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் குறித்த குழுநிலை விவாதம் பெப்ரவரி 27 ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரை 4 சனிக்கிழமை நாட்கள் உள்ளடங் கலாக 19 நாட்கள் இடம்பெறவுள்ளன. இதற்கான வாக்கெடுப்பை மார்ச் 21ஆம் திகதி பி.ப 6.00 மணிக்கு நடத்துவதற் கும் இங்கு இணக்கம் காணப்பட்டது.

வரவு=செலவுத்திட்ட காலப்பகுதியில் மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.00 மணி வரையான நேரம் 5 வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப் பட்டிருப்பதுடன், மு.ப 10.00 மணி முதல் பி.ப 6.00 மணி வரையான காலப் பகு தியில் வரவு - செலவுத்திட்ட விவாதம் இடம்பெறும்.

வாக்கெடுப்பு நடத்தப்படும் தினங்களான பெப்ரவரி 25 மற்றும் மார்ச் 21ஆம் திக திகள் தவிர ஏனைய அனைத்து நாட்களி லும் பி.ப 6.00 மணி முதல் பி.ப 6.30 மணிவரையான காலப்பகுதி சபை ஒத்தி வைப்பு நேரத்தின் போதான பிரேரணைக் காக ஒதுக்கப்பட்டிருக்கும். (அ-எ-44)

## யாழ்...

கழிவுகளைச் சேகரிப்பதற்கு மாநகரசபை தீர்மானித்துள்ளது. வீதிகளில் குப்பை களை வீசுவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாட்டை முழுமையாக நிறை வேற்றுவதற்கு பொதுமக்கள் பூரண ஆத ரவை வழங்க வேண்டும் என்று யாழ்ப் பாணம் மாநகரசபை ஆணையாளர் ச. கிருஷ்ணேந்திரன் வேண்டுகோள் விடுத் துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளதாவது

திண்மக் கழிவகற்றலில் உள்ள குறைபா டுகள் காரணமாக நகர வீதிகளில் பொது மக்கள் குப்பைகளை வீசுகின்றனர் என்ற அபிப்பிராயம் நிலவுகின்றது. அந் தக் குப்பைகளை அகற்றுவதில் மாநகர சபை பலத்த சவால்களை எதிர்நோக்கி யுள்ளது.

இந்தக் குறைபாட்டைத் தீர்க்கும்வகை யில் யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட ஒவ்வொரு வீடுகளுக்கும் திண்மக் கழிவ கற்றல் பதிவு அட்டை வழங்கத் தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்க ளால் திண்மக் கழிவகற்றல் பதிவு அட்டை விநியோகிக்கும் செயற்பாடு நடைபெற்று வருகின்றது. இந்த அட்டையானது பொதுமக்கள் வீட்டுக் கழிவுகளை வெளி யேற்றும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகளையும், தொடர்ச்சியாக கண்காணிப்புகளையும் மேற்கொள்வ தற்கு ஏற்றதாகவும், யாழ்ப்பாணம் மாந கரசபையின் கழிவகற்றலில் காணப்படு கின்ற குறைபாடுகள் தொடர்பாக உடன டியாக முறைப்பாடுகளை மேற்கொள்வ தற்கு ஏற்றதாகவும் வடிவமைக்கப்பட்டுள் ளது.

யாழ்ப்பாணம் மாநகரசபை வட்டார அபி விருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் திண் மக்கழிவகற்றல் முறைமை தொடர்பாக ஆராய்வதற்கு உங்கள் வீடுகளுக்கு வரும்போது சரியான தகவல்களை வழங்கி ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று பொதுமக்களைக் கேட்டுக்கொள் கின்றேன்.

இந்தச் செயற்பாட்டை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு யாழ்ப்பா ணம் மாநகரசபைக்கு வரி செலுத்துவர் என்ற வகையில் உங்களின் பூரண ஆத ரவை வழங்க வேண்டும் என்று கேட் டுக்கொள்கின்றேன்.

அதேவேளை, வீதிகளில் குப்பைகளை வீசுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள் ளது -என்றுள்ளது. (அ-எ-26)

## வவுனியா...

சைக்கிளில் பயணித்த சிறுவர்களும், பஸ்ஸும் மோதியதில் இந்த விபத்து நடந் துள்ளது. பாவற்குளம், படிவம் இரண்டு பகுதியில் பஸ்ஸை நிறுத்திய சாரதி, மீண் டும் பஸ்ஸை எடுத்தபோது சைக்கிளில் பயணித்த இரு சிறுவர்கள் வீதியின் குறுக்கே சென்றபோது பஸ்ஸில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள னர். (அ-எ-110)

## பாடசாலைகள்...

ழக்கிழமை ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அனைத்துப் பாடசாலைகளினதும் மூன் றாம் தவணையின் இரண்டாம் கட்டக் கற்றல் செயற்பாடுகள் எதிர்வரும் 24 ஆம் திகதி நிறைவடையும் என்று கல்வி அமைச்சு நேற்று வெளியிட்டுள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## சாவகச்சேரி...

யின் பதில் பொறுப்பு மருத்துவ அதிகாரி கோ.ரஜீவ் தெரிவித்துள்ளார். மருத்துவ மனையில் இதுவரையில் பாஸ் நடை முறை பின்பற்றப்படவில்லை. இன்றுமு தல் வெளிநோயாளர் பிரிவு தவிர்ந்து ஏனைய அனைத்துக்கும் பாஸ் நடை முறை பின்பற்றப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளியான...

மற்றும் மனுதாரர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று உயர்நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர் தாக்கல் செய்த நான்கு அடிப்படை உரிமை மனுக்களை பரிசீலித்த பின்னர் உயர் நீதிமன்றம் இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது.

மூன்று வினாக்களுக்கான விடைகளுக்கும் திறந்த புள்ளிகளை வழங்குவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானம் சட்டவிரோதமானது என்றும் நீதியரசர்கள் யசந்த கோதாகொட, குமுதினி விக்கிரமசிங்க மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் குறிப்பிட்டுள்ளது.

இந்தப் பிரச்சினையில் நிபுணர்கள் குழு வழங்கிய பொருத்தமான பரிந்துரைகளில் ஒன்றைத் தொடர வேண்டும் என்றும், அந்த முடிவை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ள உயர்நீதிமன்றம், விடைத்தாள் மதிப்பீட்டை ஆரம்பித்து முடிப்பதற்கும், முடிவுகளை இறுதி செய்வதற்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு உத்தரவிட்டுள்ளது. (அ-எ-இ)

## ஊழல்...

9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர், அந்தச் சட்டத்துக்கு அமைய புலனாய்வு, வழக்குத் தாக்கல், நிர்வாக ரீதியான மற்றும் நீதிமன்ற ரீதியான செயற்பாடுகளை மேற்கொள்ளும்போது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாற்றுதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு கணிசமான சட்டரீதியான பொருள்கோடல்கள் மற்றும் தொழில்நுட்பப் பிரச்சினைக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

இந்தத் திருத்தச் சட்டத்தின் சில பிரிவுகளை திருத்தம் செய்தல் மற்றும் புதிதாக சில பிரிவுகளை மேற்குறித்த சட்டத்தில் அறிமுகம் செய்வதற்கு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாற்றுதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு முன்மொழிந்துள்ளது.

2023ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளை ஆய்வு செய்து கட்டாயமாகத் திருத்தம் செய்ய வேண்டிய பிரிவுகள் மற்றும் உள்ளடக்கப்பட வேண்டிய புதிய பிரிவுகள் தொடர்பான விதந்துரைகள் அடங்கிய விவரமான அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்காக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாற்றுதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் ஒரு ஆணையாளரின் தலைமையில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சட்ட வரைஞர் திணைக்களம் ஆகிய நிறுவனங்களின் சிரேஷ்ட அலுவலர்களை உள்ளடக்கிய குழுவை நியமிப்பதற்கு ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ-எ-இ)

கடந்த ஆண்டில்

# விசர்நாய்க்கடியால் இருவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 1

2024 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் விசர்நாய்கடிக்கு உட்பட்டு யாழ். போதனா மருத்துவமனையில் இருவர் உயிரிழந்துள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச-125)



சிறுவர் பராமரிப்பு நன்னடத்தைத் திணைக்களத்தினால் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் பொருண்மியம் நலிவுற்ற 5 குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குத் துவிச்சக்கர வண்டிகள் கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டன. (ச-25,9)

## மரண அறிவித்தல்

தோற்றம்
13 . 11 . 1947



மறைவு
30 . 12 . 2024

**இந்திரகுமாரி பரராஜசேகரம்**

கோண்டாவில் மேற்கு கலட்டி ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இந்திரகுமாரி பரராஜசேகரம் நேற்று முன்தினம் (30.12.2024) திங்கட்கிழமை அன்று இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலம்சென்றவர்களான சேனாதிராசா-வள்ளியம்மை தம்பதியின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-இளையபிள்ளை தம்பதியின் அன்பு மருமகளும் பரராஜசேகரம் (ஓய்வு பெற்ற பதிவாளர் மாவட்ட நீதிமன்றம்) அவர்களின் அன்பு மனைவியும், Dr.கௌரி (சிரேஸ்ட விரிவுரையாளர்-தாவரவியற் துறை விஞ்ஞான பீடம் யாழ் பல்கலைக்கழகம்), Dr.கிருஸ்ணகோபி (கனடா), ஸ்ரீவாணி (Pharmacist-அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புத்தாயாரும், Eng.இராஜ்குமார் (RG Associate), ஜெயகரன் (Quantity Surveyor-கனடா), சிவசீலன் (Engineering technician அவுஸ்ரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சங்கவி, மனஸ்வி, சைனுயா, சஸ்விகன், சாயினி, சேனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சிவசுப்பிரமணியம், பாலசுப்பிரமணியம், இராஜேஸ்வரன், வசந்தகுமாரி, இராஜகுமாரி மற்றும் காலம் சென்ற சந்திரகுமாரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (02.01.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல், தகனக்கிரிகைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கலட்டி ஒழுங்கை,**
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 300 0352**

(CS 57092) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
06 . 04 . 1938



மறைவு
30 . 12 . 2024

**அமரர் செல்லத்துரை பரமேஸ்வரன்**

யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பரமேஸ்வரன் (Retired Chief Clerk, Municipal Council, Jaffna. English Master) அவர்கள் நேற்று முன்தினம் (30.12.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், ஞானேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் Dr.சுதர்சினி (National Hospital. Colombo), புராதனி (Teacher, U.K), இமாதினி (Teacher,J/Yarlton College, Karainagar) ஆகியோரின் பாசமிகு தந்தையும் Dr. சுரேந்திரன் (Lecturer, U.K), சுபாகர் (Teacher) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான ஜெயவீரசிங்கம், சிவசுப்பிரமணியம் மற்றும் சறோஜினிதேவி, கமலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் இராஜேஸ்வரி (Germany); நகுலேஸ்வரி, நந்தகுமார் (USA) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் சிவகுருநாதர் (Germany), வாமதேவன், கீதா, சிவயோகமலர், அன்னம்மா, நாகராசா, கோபாலசிங்கம் ஆகியோரின் சகலனும் அதிசயா, தூயா, நயனிதன், மேகன், மேகவி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கரியைகள் நாளை (02.01.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**021 221 2113**
**077 757 4564**

(CS 29555) P-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த ஆண்டில் வெப்பம் உயரும்

கொழும்பு, ஜன.1
2025 ஆம் ஆண்டு புவி வெப்பநிலை கடந்த பத்து வருடங்களில் இல்லாதவாறு அதிகரிக்கும் என ஐ.நா.எச்சரித்துள்ளது.
2023 ஆம் ஆண்டு 1.45 பாகை செல்ஸியசாக இருந்த புவி வெப்பநிலை 2025 ஆம் ஆண்டு1.54 பாகை செல்ஸியசாக அதிகரிக்கும் என சர்வதேச வளிமண்டலவியல் அமைப்பு தெரிவித்துள்ளது.
12 நாடுகளைச்சேர்ந்த 15 அரச சார்பற்ற நிறுவனங்கள் டிசெம்பர் 17 தொடக்கம் 19 ஆம் திகதி வரை ஐ.நா தலைமையகத்தில் ஒன்று கூடி 2025 ஆம் ஆண்டு அதிகரிக்கவுள்ள புவி வெப்பநிலையை எவ்வாறு கையாள்வது என ஆராய்ந்துள்ளன.
சில நாடுகளில் வெப்பநிலை 50 பாகை வரை அதிகரிக்குமெனவும் சர்வதேச வளிமண்டலவியல் அமைப்பு தெரிவித்துள்ளது.
(ரி-45-6)


## NEW SCIENCE HALL
KANNATHIDDY ROAD, JAFFNA

**2025 A/L Day Class**
**கணித, விஞ்ஞானப் பிரிவுகள்**
(2024 A/L பரீட்சைக்கு தோற்றியவர்களுக்குரியது)

| | | |
|---|---|---|
| COM .MATHS | - | P. செந்தில் நாதன் 7.00-am |
| | - | S. சிவகரன் 5.00-7.00 pm |
| BIOLOGY | - | V.S. குணசீலன் 8.00 - 9.30 am |
| CHEMISTRY | - | V.K. நந்தா 9.30-11.30 am |
| | - | P. லோகா 9.30-11.30 am |
| PHYSICS | - | G. பிரபா |
| | - | R. ராகுலன் 12.00-2.00 p.m |

ஆரம்பம்: 06.01.2025
நிகழ்நிலை (Zoom) வகுப்புக்களும் நடைபெறும்
தொடர்பு: 0777 917 611, 076 566 3006, 076 569 3006,
https: // facebook.com new science Hall Jaffna

## மருந்தாளர் தேவை
வடமராட்சியிலுள்ள மருந்தகம் ஒன்றிற்கு அனுமதிப் பத்திரமுள்ள மருந்தாளர் தேவை.
அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு:- 077 959 9760

## வார்த்தையாகிய கடவுள் உங்களை ஆசீர்வதிக்கிறார்
உங்கள் PHONES மற்றும் கணினி சாதனங்களில் BIBLE ஐ Install செய்து வாசியுங்கள்.
தேவாலயத்திற்கு சென்று வழிபடுங்கள்.
தேவாலயத்தில் சிரமதானம் செய்யுங்கள்.
மா.செ.சுதர்சன்
077 725 1296
(CS/56880) J-1

## ஸ்ரீ நயினை அம்மன் திருமணசேவை
உள்நாடு, வெளிநாடு, வைத்தியர், பொறியியலாளர், வங்கி முகாமையாளர், விரிவுரையாளர், அரச உத்தியோகம், தனியார்துறை, செவ்வாய்க்குற்றம், சூரியன் + செவ்வாய் போன்ற அனைத்து விதமான ஜாதகங்களும் எம்மிடம் மிகப் பொருத்தமாக உடன் பெற்றுக்கொள்ளலாம்.
தை மாதம் முழுவதும் அனைவருக்கும் பதிவுக் கட்டணம் இலவசம்
074 111 7874
(CS/2098) JK

## NEW SCIENCE WORLD
கணித - விஞ்ஞானப் பிரிவுகள்

**2025 Revision Classes**
**Tamil And English Medium**
Zoom இன் ஊடான இணையவழி வகுப்புக்களும் நேரடி வகுப்புக்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

| | |
|---|---|
| Physics | R.Kumaran, R. Kugen |
| Chemistry | Dias, K.T.Shivakumar |
| Biology | N.T. Gajenthiran |
| Com.Maths | V. Khariharan |

ஆரம்பம் :- 05.01.2025 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் :- 09.30 am
அனுமதிகள் 02.01.2025 தொடக்கம் வழங்கப்படவுள்ளன.
Zoom இன் ஊடான இணையவழி வகுப்புக்களுக்கு சகல மாவட்ட மாணவர்களும் இவ்வகுப்பில் இணைந்து கொள்ள முடியும்.
மேலதிக விபரங்கள் மற்றும் தொடர்புகளுக்கு:-
021 221 6690, 077 336 4030, 075 836 4055
(CR/43983) JK

## நான்காம் ஆண்டு நினைவு தினம்

தோற்றம் 03 . 04 . 1938
மறைவு 01 . 01 . 2021



**பிரான்சிஸ் வின்சென் டீ போல்**
(வித்தியா காருண்யன்)

ஆலம் விழுதுகள் போல ஆயிரம் உறவு கொண்டு
குடும்ப உறவுகள் வீழ்ந்திடாதிருக்க வேரென இருந்தவரே
காலமெல்லாம் உம் பிள்ளைகளை அரவணைத்து
கலங்கரை விளக்காய் வழிகாட்டினீரே!

நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும்
அமிர்தசுரபியாய் யாவர்க்கும் வழங்கும் வல்லமையும்
சுற்றத்தைப் போற்றிக்காக்கும் உயர் பண்பும்
நிறைந்த உத்தம குணமும் படைத்தவரே!

சிரிப்பு சிந்திய உங்கள் வதனம்
ஆறுதலான உங்கள் வார்த்தைகள்
நேர்மையான உள்ளம்
எவ் வேளையிலும் தளராத மனம்
இத்தனையும் கொண்டு சிறப்புடனே வாழ்ந்தீரே!

நீர் எம்மைவிட்டு பிரிந்து நான்கு ஆண்டுகள் ஆனாலும்
உம் பிள்ளைகள் நாம் உமது நினைவுகளுடன்
இன்றும் என்றும் வாழ்ந்து கொண்டிருப்போம்.
ஆண்டவரின் தோழமையில் நீர் இன்புற்றிருக்க
உமக்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

றோஸ் கொட்
கடற்கரை வீதி, முனை- பருத்தித்துறை.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்
021 226 3129
(CS/57087) JK




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.01. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




அனைவருக்கும் இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்

# உதயா
## ஜுவல்லர்ஸ்





22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு உத்தரவாதத்துடன்
செய்துகொடுக்கப்படும்.

**அழகிய தங்க நகைகளுக்கு
நீங்கள் நாடவேண்டிய
ஒரே இடம்...**

79G கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Email-uthayaa Jewellerss@gmail.com
Facebook - uthayaa Jewellerss
T.P No - 074 069 4449 / 021 222 4434

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருக்கும் இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்

**நீர்க்கசிவைத் தடுப்பதற்கு**

உங்கள் புதிய, பழைய கட்டடங்கள், கோவில், வில்லு மண்டபங்கள், கொங்கிறீட் சிலம்புகள் அனைத்திற்குமான நீர்க்கசிவைத் தடுப்பதற்கும் மற்றும் வீடுகளில் ஏற்படும் வெடிப்புகளை உத்தரவாதத்துடன் சீர்செய்தும் தருவோம். நீங்களும் இரசாயன பொருட்களைப் பெற்றும் சீர்செய்யலாம்.

தரம் குறைந்த போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

10 வருட உத்தரவாதம் உண்டு.
உலகத்தரம் மிக்க இரசாயனப் பொருட்கள் Finex ஸ்தாபனத்தாரின் வட மாகாண ஏக விநியோகத்தர்கள். முதன் முதலில் வடமாகாணத்தில் அறிமுகம் செய்தவர்கள்.

North and East Engineering
55 Stanly Road, Jaffna, Srilanka.
FINEX
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com



55 ஆவது படைப்பிரிவினரின் ஏற்பாட்டில் நத்தார் இன்னிசை நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம், வடமாகாண ஆளுநர் வேதநாயகன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-22-27-113-25)

அனைவருக்கும் இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்

**செல்வி நகை அகம்**

தங்கப்பவுண் நகை வியாபாரம்
Manufacturers of Gold Jewels

22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்துகொடுக்கப்படும்.

205 / 1, K.K.S. வீதி,
குளப்பிட்டி யாழ்ப்பாணம்.
T.P.: 077 749 1895



அனைவருக்கும் இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்

**வினோ நகைப்பூங்கா**

New Year






உரிமையாளரும், ஊழியர்களும்
வினோ நகைப்பூங்கா
இல. 177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்

New Lalithas Jewellery

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**

ஒரிஜினல் தங்க நகைகளை பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

Happy New Year

காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன்நகையால்
மேலும் உங்கள்
புன்னகை ஒளிரும்
விரையுங்கள்
நியூ லலிதாஸ்






30,32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 5511 / 077 224 5511

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனையில் இருந்தவர்களை வெளியேற்றிய இஸ்ரேல் இராணுவம்!

ஜெருசலேம், ஜன. 1
வடக்கு காஸாவில் இயங்கிவந்த ஒரே ஒரு மருத்துவமனையில் இருந்தவர்கள் இஸ்ரேல் இராணுவத்தினரால் கட்டாயப்படுத்தப்பட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது. அதேவேளை, காஸாவில் சுகாதார வசதிகள் காணப்படும் பகுதிகளை இலக்குவைத்து இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதல்களால் பொதுமக்கள் பலர் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. வடக்கு காஸாவில் இயங்கிவந்த ஒரே ஒரு மருத்துவனையில் இருந்து நோயாளர்கள் மற்றும் பணியாளர்கள் வெளியேறுவதற்கு இஸ்ரேல் இராணுவம் 15 நிமிடங்கள் அவகாசம் வழங்கியது என்று அந்த மருத்துவமனையின் தலைவர் தெரிவித்துள்ளார். அதன்பின்னர் இஸ்ரேலியத் துருப்புக்கள் மருத்துவமனைக்குள் புகுந்து அங்கிருந்தவர்களை கட்டாயப்படுத்தி வெளியேற்றியது என்றும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை, அந்த மருத்துவமனை இருந்தபகுதியை ஹமாஸ் பயங்கரவாதிகளின் கோட்டை என்று இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது. (எ-இ)



## சூரியனை நெருங்கி பார்க்கர் சாதனை!

நியூயோர்க், ஜன. 1
சூரியனை மிக நெருக்கத்தில் கடந்து நாஸாவின் பார்க்கர் விண்கலம் சாதனை படைத்துள்ளது.
வெள்ளிக் கிரகத்தின் சுற்றுவட்டப் பாதையைப் பயன்படுத்தி சூரியனைச் சுற்றிவந்து ஆய்வுசெய்வதற்காக பார்க்கர் விண்கலம் 2018ஆம் ஆண்டு ஏவப்பட்டது. கடந்த வெள்ளிக்கிழமை 10.30 மணியளவில் இந்த விண்கலம் இதுவரை இல்லாத அளவு மிக நெருக்கமாகச் சூரியனைக் கடந்துள்ளது. சூரியனில் இருந்து 38 லட்சம் கிலோமீற்றர் தூரத்தில் இந்த விண்கலம் கடந்து சென்றிருந்தாலும், மனிதர்களால் உருவாக்கப்பட்ட பொருள் ஒன்று சூரியனை இந்தளவு நெருக்கத்துக்குச் சென்றுள்ளமை இதுவே முதன்முறையாகும்.
பார்க்கர் விண்கலம் சூரியனைக் கடக்கும்போது ஆயிரத்து 800 டிகிரி பரனைட் வெப்பநிலை காணப்பட்டபோதும், விண்கலம் தொடர்ந்தும் சிறப்பாக இயங்கி வருகின்றது என்று நாஸா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
அதீத வெப்பம் காரணமாக பார்க்கர் விண்கலத்தில் இருந்து தகவல் பெறப்படுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது என்றும், நேற்றுமுன்தினம் முதல் மீண்டும் தரவுகளைப் பெறுவதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் நாஸா தெரிவித்துள்ளது. இதன்மூலம் சூரியனைப் பற்றி இதுவரை தெரியாத பல தகவல்களைத் தெரிந்து கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## தென்கொரியாவின் முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராகப் பிடியாணை

சியோல், ஜன. 1
தென்கொரியாவின் முன்னாள் ஜனாதிபதி யுன் சுக் யோலை கைதுசெய்யும் வகையில், நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.
தென்கொரியாவின் தலைநகர் சியோலில் உள்ள உச்ச நீதிமன்றத்தால் நேற்று மாலை இந்தப் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இன்று அல்லது நாளைக்குள் அவர் கைது செய்யப்பட அதிகளவு சந்தர்ப்பங்கள் உள்ளன என்று தென்கொரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
யூன் சுக் யோல் கடந்த 3ஆம் திகதி திடீரென நாட்டில் இராணுவ சட்டத்தை நடைமுறைப்படுத்தினார். அத்துடன், இராணுவ அவசர நிலையையும் அறிவித்தார். தென்கொரிய நாடாளுமன்றத்தை முடக்கும் இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக பொதுமக்கள் வீதிக்கு இறங்கியதைத் தொடர்ந்து அவர் தனது உத்தரவைத் திரும்பப் பெற்றதுடன், பதவியையும் இழந்தார்.
இதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகளின் விளைவாகவே, அவருக்கு எதிராகப் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம)

## காலநிலை மாற்றத்தால் 3,700 பேர் உயிரிழப்பு!

லண்டன், ஜன. 1
இந்த ஆண்டு காலநிலை மாற்றங்கள் காரணமாக உலகளாவிய ரீதியில் 3 ஆயிரத்து 700 பேர் உயிரிழந்துள்ளனர் என்று லண்டனைச் சேர்ந்த உலக வானிலை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.
காலநிலை மாற்றத்தால் ஆண்டின் சராசரி வெப்ப நாள்களின் எண்ணிக்கை 41 நாள்களால் அதிகரித்துள்ளது. கடும் வெயில், வறட்சி, காட்டுத் தீ, வெள்ளம், புயல் போன்ற காரணங்களால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சூடான், நைஜீரியா, கமரூன் ஆகிய நாடுகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் 2 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் அந்தக் கண்காணிப்பகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## ரிக்ரொக் செயலிக்கு டொனால்ட் ட்ரம்ப் ஆதரவு

நியூயோர்க், ஜன. 1
அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்கவுள்ள டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்காவில் ரிக்ரொக் செயலி தொடர்ந்து இயங்குவது தொடர்பான தனது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளார்.
அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த ஏப்ரல் மாதம் தேசியப் பாதுகாப்பு போன்ற காரணங்களை மேற்கோள்காட்டி, சீனாவின் பைட்டான்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான ரிக்ரொக் செயலியை அடுத்த 270 நாள்களுக்குள் விற்பனை செய்வதற்கு அவகாசம் வழங்கும் சட்டத்தை இயற்றினார். அவ்வாறு விற்பனை செய்யாவிட்டால் அப்பிள் மற்றும் கூகுள் பிளே ஸ்டோரில் இருந்து ரிக்ரொக் செயலியை அகற்ற உத்தரவிடப்படும் என அதில் கூறப்பட்டிருந்தது.
இந்நிலையில் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்கவுள்ள டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்காவில் ரிக்ரொக் செயலி தொடர்ந்து இயங்குவது தொடர்பான தனது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளார். (எ-இ)



## பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கினால் அனுமதி இரத்து

காபுல், ஜன. 1
ஆப்கானிஸ்தானில் பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் அனைத்து உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்களும் முடக்கப்படும் என்று தலிபான்கள் அறிவித்துள்ளனர்.
ஆப்கானிஸ்தானில் இயங்கும் அரசசார்பற்ற நிறுவனங்களில் பணிபுரியும் பெண்கள் இஸ்லாமிய முறைப்படி முகத்தை மறைக்காததால் அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதை நிறுத்துமாறு இரண்டு வருடங்களுக்கு முன்னர் தலிபான்கள் உத்தரவிட்டிருந்த னர்.
எனினும், தலைநகர் காபுல் உள்ளிட்ட பல பகுதிகளிலும் இந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை. இதையடுத்தே, பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் அனைத்து உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்களும் முடக்கப்படும் என்று தலிபான்கள் அறிவித்துள்ளனர்.
தலிபான்களின் இந்த அறிவிப்புக்கு ஐக்கிய நாடுகள் சபை தனது அதிருப்தியையும், கண்டனத்தையும் தெரிவித்துள்ளது.
'ஆப்கானிஸ்தானில் பெண்களின் சுதந்திரமும். பெண்கள் கண்ணியமாக நடத்தப்படுவதும் ஒவ்வொரு நாளும் இல்லாமல் போகின்றது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும்' என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவட்ட பண்பாட்டுப் பெருவிழாவில் மூத்த கலைஞர்கள் 'யாழ் முத்து' விருது மற்றும் இளம் கலைஞர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (எ-25,9)



வரலாற்றுச் சிறப்புமிக்க வண்ணையம்பதி ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தின் ஸ்ரீ ஆஞ்சநேய ஜனனதின உற்சவம் கடந்த திங்கட்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. கருவறையில் அருள் பாலித்து விளங்கும் ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள், சீதேவி, பூமாதேவி ஆகிய தெய்வங்களுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்றதுடன், அதனைத் தொடர்ந்து ஸ்ரீ ஆஞ்சநேயருக்கு தீபாராதனைகளும், 108 மந்திர அர்ச்சனைகளும் இடம்பெற்றன. (எ-45-27)





## வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்த மலையாளபுரம் புதிய பாரதி அணி

கிளிநொச்சி, ஜன. 1

கிளிநொச்சிபாரதிபுரம் ஆதவன் விளையாட்டுக்கழகம் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டியில் மலையாளபுரம் புதிய பாரதி அணி சம்பியனானது. இறுதிப்போட்டி அண்மையில் ஆதவன் விளையாட்டுக்கழக கரப்பந்தாட்டத் திடலில் நடைபெற்றது. இறுதிப் போட்டியில் வட்டக்கச்சி குறிஞ்சி விளையாட்டுக்கழகமும் மலையாளபுரம் புதிய பாரதி விளையாட்டுக்கழகமும் மோதின. இதில் புதிய பாரதி அணி 3-0 என்ற கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

சுழற்சி முறையிலான போட்டிகளில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 13 அணிகள் பங்குபற்றியிருந்தன. இறுதிப்போட்டி நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (எ-33-113)







அமரர் நடிகர் விஜயகாந்தின் ஓராண்டு நினைவஞ்சலி நிகழ்வு மறவன்புலவு கிராம மக்களின் ஏற்பாட்டில் மறவன்புலவு பொது நோக்கு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. அஞ்சலி நிகழ்வின் பின்னர் மதிய உணவு வழங்கப்பட்டது. நிகழ்வில் கிராம மக்கள் சமூக ஆர்வலர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (எ-22,159)



சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட, பொருண்மியம் நலிவுற்ற மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ப.கேசவதாசனின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் கலந்துகொண்டார். நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர்கள், முன்னைநாள் பணிப்பாளர்கள், பணியாளர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-25,27)





## விஜயகாந்தின் நினைவு யாழில் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 1

தென்னிந்திய முன்னணி நடிகரும், அரசியல்வாதியுமான மறைந்த நடிகர் விஜயகாந்தின் முதலாம் ஆண்டு குருபூசைதின நினைவேந்தல் யாழ்ப்பாணம் நல்லையடி மதியில் கடந்த சனிக்கிழமை நினைவுகூரப்பட்டது.

நிகழ்வில் விஜயகாந்தின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து, சுடர் ஏற்றப்பட்டதுடன் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இடம்பெற்றது. (ச-45-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு திசைகளையும் இணைத்துப் பயணிப்போம்

### புத்தாண்டு வாழ்த்தில் ஜனாதிபதி தெரிவிப்பு



நாடும் நாட்டு மக்களும் பல தசாப்த காலமாகக் கண்ட நல்ல கனவுகள் நனவாகும் புதிய யுகத்தின் உதயத்துடன், புத்தாண்டில் நாம் அடியெடுத்து வைக்கின்றோம். வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய நான்கு திசைகளையும் இணைத்து அனைத்து மக்களின் நம்பிக்கையையும் பெற்ற நாம் தொடர்ந்தும் அதே பலத்துடன் பயணிப்போம் என்று ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பிவைத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதாவது:

2024ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைக்க எம்மால் முடிந்தது. அதற்கிணங்க, மக்கள் எதிர்பார்க்கும் சிறந்த ஆட்சியொன்றை உருவாக்கும் நோக்கில் அன்றிருந்த அரசியல் கலாசாரத்தில் பெரிய மாற்றத்தை மேற்கொண்டு, மக்கள் ஆணையின் பொறுப்புக்கூறல் மற்றும் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு நாம் தற்போது துரிதமாகச் செயற்பட்டு வருகின்றோம்.

கிராமிய வறுமையை ஒழித்தல், 'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டம் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல் ஆகியவை நாட்டின் முன்னணி அபிவிருத்தித் தேவைகளாக நாம் அடையாளம் கண்டுள்ளோம். அந்தப் பின்னணியில் சமூக, சுற்றாடல் மற்றும் நெறிமுறை புத்தெழுச்சியின் ஊடாக சமூகத்தை மேலும் மேம்பட்ட நிலைக்கு உயர்த்தும் நோக்கில் 'கீளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டம் புத்தாண்டு உதயத்துடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த பரிமாற்றரீதியான அபிவிருத்திச் செயற்பாடுகளின் ஊடாக நாடென்ற ரீதியில் நாம் 2024ஆம் ஆண்டில் நாம் அடைந்த பொருளாதார ஸ்திரத்தன்மையை மேலும் உறுதிப்படுத்த இருக்கிறோம். அனைவருக்கும் 'வளமான நாடு அழகான வாழ்வை' பெற்றுக் கொடுப்பதற்காக புதிய மனப்பாங்குகளை மேம்படுத்தி, புதிய உறுதிப்பாடுகளை மனதில் கொண்டு சகோதரத்துவத்துடன் முன்னோக்கி வருவதற்கு புதுவருட உதயத்துடன் சிறந்த வாய்ப்பு உருவாகியிருப்பதாக நான் உறுதியாக நம்புகிறேன். சுதந்திரத்தின் பின்னர் இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக மக்கள் நேய அரசாங்கத்தை உருவாக்கி, அனைத்து மக்களும் ஒன்றிணைந்த அபிவிருத்தியடைந்த இலங்கை பற்றிய கனவை நனவாக்கும் வாய்ப்பு உங்களுக்கும் எமக்கும் கிடைத்துள்ளது. விட்டுக்கொடுக்க முடியாத இந்தப் பாரிய பொறுப்பு நம் அனைவரின் தோள்களிலும் சுமத்தப்பட்டுள்ளது. அந்தப் பொறுப்பு குறித்து எங்களுக்கு நல்ல புரிதல் உள்ளது. இந்த நூற்றாண்டின் தவறவிட்ட சாதனைகளை மீண்டும் நாட்டுக்கு வென்று கொடுக்கவும் மக்களின் கனவுகளை நனவாக்கவும், 2025ஆம் ஆண்டு புத்தாண்டில் மேலும் வீரியத்துடனும் உறுதியுடனும் அர்ப்பணிக்க நடவடிக்கை எடுப்போம் என்றுள்ளது. (ம)

# நாட்டின் சவாலை எதிர்கொள்வோம்!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வாழ்த்து



நமது தாய்நாடு தற்போது எதிர்கொள்ளும் சவால்களை சரியாக அடையாளம் கண்டு, அவற்றை வெற்றிகொள்ளத் தேவையான ஆற்றல், வலிமை மற்றும் தொலைநோக்குடன் செயல்பட புது வருடத்தில் நாம் அனைவரும் உறுதி பூண வேண்டும். இலங்கை தேசத்தை கட்டியெழுப்புவதற்கான திட்டத்தை நாம் மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலத்தைப் போல குறுகிய இன, மத கருத்துக்களால் பிளவுபட்ட அரசியல் திட்டங்கள் மீண்டும் தலைதூக்காமல் இருப்பது மிக முக்கியம். அத்துடன் கடந்த நான்கு வருடங்களாக நாட்டு மக்கள் எதிர்கொண்ட நிச்சயமற்ற தன்மை, ஏமாற்றங்களை முடிவுக்கு கொண்டுவந்து, மக்கள் தாய் நாட்டில் தங்கியிருக்க ஏதுவான பொருளாதார, அரசியல், சமூக சூழலை உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பாகும்.

இதில் நாம் செய்ய வேண்டியது அமைதியின்மையை இல்லாதொழித்து நிம்மதியை வெற்றி பெறச்செய்வதற்கான பாதையை சரியாக தெளிவுபடுத்திக் கொள்வதாகும். நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியால் சிதைந்துள்ள வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப புதிய பொருளாதார திட்டமும் செயல்முறையும் தேவை என்பது மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்படுகிறது. எனவே நாட்டின் எதிர்காலத்திற்காக அரசியல், சமூக மற்றும் பொருளாதார முன்னெடுப்புகளை வலுப்படுத்த புது வருடத்தில் அர்ப்பணிப்புடன் செயல்படுவோம் என்றுள்ளது. (ம)

# முறைமை மாற்றத்தை ஒவ்வொருவரும் ஆரம்பிப்போம்

### ஆளுநர் தெரிவிப்பு



புத்தாண்டின்போது முறைமை மாற்றத்தை எம் ஒவ்வொருவரில் இருந்தும் ஆரம்பிக்க வேண்டும் என்று வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதாவது:

புத்தாண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த வேளையில், அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு வடக்கு மக்கள் ஒவ்வொருவருக்கும் முன்னேற்றத்தைக் கொண்டுவரட்டும். புத்தாண்டு என்பது தனியே கொண்டாட்டத்துக்கான நேரம் மட்டுமல்ல எங்கள் சிந்தனைகளை புதுப்பித்தலுக்கான தருணமும் கூட. மகிழ்வுடன் வரவேற்கும் புதிய ஆண்டில் 'முறைமை மாற்றத்தை' நாம், எம்மில் ஒவ்வொருவரிடமிருந்தும் ஆரம்பிக்கவேண்டும் என்று விரும்புகின்றேன். எங்கள் நிர்வாகத்தின் முதுகெலும்பாக, மக்களின் நம்பிக்கையை வளர்ப்பதிலும் அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் சேவைகளை வழங்குவதிலும் அரச பணியாளர்கள் ஒவ்வொருவரினதும் அர்ப்பணிப்பும் தொழில்முறையும் மிக முக்கியமானவை. நேர்மை, செயல்திறன் மற்றும் பொறுப்புணர்வோடு உங்கள் விலைமதிப்பற்ற சேவைப் பங்களிப்புகளைத் தொடரவேண்டும் என அன்புரிமையுடன் கோருகின்றேன். பொதுச் சேவையில் மிக உயர்ந்த தரங்களை நிலைநிறுத்த நாங்கள் ஒன்றாகப்பாடுபடுவோம். எங்கள் மக்கள் அனைவருக்கும் வளமான எதிர்காலத்தை உருவாக்க அயராது உழைப்போம். என்றுள்ளது. (ம)

# உத்வேகம் துளிர்விடட்டும்



மலரும் புத்தாண்டில் அனைவரும் புதிய உத்வேகத்தோடு செயற்பட எல்லாம் வல்ல பெருங்கூத்தனைப் பிரார்த்திக்கின்றோம். கடந்த காலத்திலேற்பட்ட பேரழிவுகளிலிருந்து மீண்டெழுவதற்கு எவருக்கும் அடிபணியாது அல்லும் பகலும் உழைப்பு ள்ளவர்களாகச் செயற்படுவதற்குதிடசங் கற்பம்பூணுவோமாக. அரசியல் ரீதியாக ஏற்பட்ட மாற்றங்களை தமிழினத்தின் விடிவுக்காக அதை அமைத்து எமக்கு சாதகமாக்கிக் கொள்வதற்கு நாம் அனைவரும் சுவர்த்த மெய்ஞானத்தோடு செயற்படுவோமாக. நீதி நேர்மை அஞ்சாமை சமத்துவம் போன்றவற்றை பேணி உலகில் புதியதோர் எழுச்சியுள்ள சமூகத்தை கட்டி எழுப்புவோமாக. இனமத விரோதங்களை முற்றாக துடைத்தெறிவதற்கு அர்ப்பணிப்போட செயற்படுவோமாக. அனைவரின் உணர்வுகளுக்கும் மதிப்பளித்து வாழ்வோமாக.

**ஈசான சிவ சக்திகிரீவன்**
தலைவர்
இந்து சமயப் பேரவை

## நல்வாழ்வு கிடைக்கட்டும்

சென்ற வருடமதில் வந்த
துன்பங்கள் துயரங்கள் யாவும்
புது வருடத்தில் தொலைந்து போகட்டும்
கால நிலை மாற்றத்தால் நாட்டில்
வெள்ளம், மண்சரிவு மக்கள்
அகதிகளாக தற்காலிக முகாம்களில்
தங்கும் பரிதாப நிலையை கடந்தோம்

நாட்டில் ஆட்சி மாற்றத்துக்கான
ஜனாதிபதி தேர்தல் வந்தது
தேசிய மக்கள் சக்தி பெருண்பாண்மை
ஆட்சியை அமைத்துக்கொண்டது
புதிய ஆட்சியால் தமிழர்களுக்கு
நல் வாழ்வு கிடைக்குமா?

காணி விடுவிப்பு, கைதி விடுவிப்பு
காணாமல் ஆக்கப்பட்டோருக்கு
நீதிதான் கிடைக்குமா?
ஈழ மண்ணில் நாம் தமிழராய் வாழ்ந்திட
புத்தாண்டில் புதுயுகம் மலரட்டும்.

நயினை விசு இராசநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.1

யாழ். மாவட்டச் செயலக நலன்புரிக் கழகம் நடத்திய வருடாந்த உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு நிகழ்வு கழகத் தலைவர் உ. தர்ஷினி தலைமையில் மாவட்டச்செயலக கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பதில் செயலரும் நலன்புரிக் கழகத்தின் போசகருமான ம. பிரதீபன் கலந்துகொண்டார். (ச-22-27-9)



# சான்றிதழ் வழங்கல்!

யாழ்ப்பாணம், ஜன. 1

ஜே.கே.சி. மற்றும் எஸ்.எல்.ரி.சி. ஆகிய நிறுவனங்களின் இணை அனுசரணையில் இடம்பெற்ற ஆங்கிலக் கற்கைநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு ஜே.கே.சி. நிறுவன இயக்குநரும், மானிப்பாய்ப் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளருமாகிய அ.ஜெபநேசன் தலைமையில் குபேர மஹால் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட பதில் செயலர் எஸ். முரளிதரன் கலந்துகொண்டார். (ச-22,27)



இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டில் தொழில் புரியும், இலங்கையர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கும் நிகழ்வு மாகாண சிரேஷ்ட முகாமையாளர் திருமதி எல்.லக்சாயினி தலைமையில் யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ்.மாவட்டப் பதில் செயலர் ம. பிரதீபன் கலந்து கொண்டார். (ச-22,66,27,9)



அமரர் அக்னேஸின் ஓராண்டு நினைவாக பிரான்ஸில் வசிக்கும் அவரது மகன் லோகநாதன் வழங்கிய நிதி யுதவியில் யாழ். நகரில் அண்மையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொம்மைவெளி தாழ்நிலப் பிரதேசத்தில் வசிக்கும் 30 குடும்பங்களுக்கு [illegible] வழங்கப்பட்டன. (ச-22,63)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இலங்கையில் பல்வேறு முக்கியமான நிகழ்வுகள் மற்றும் வரலாற்றுத் திருப்பங்கள் நிறைந்த ஆண்டாக 2024ஆம் ஆண்டு பதிவாகியிருக்கின்றது. சுதந்திர இலங்கையின் வரலாற்றில், பாரம்பரியக் கட்சிகளைத் தோற்கடித்து தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்தமை, பிரதானிகளின் பாதுகாப்புக் குறைப்பு, உள்நாட்டு அரசியல் நகர்வுகள் என பரபரப்புக்குப் பஞ்சமில்லாமல் 2024ஆம் ஆண்டு நகர்ந்து முடிந்திருக்கின்றது. அதன் அடிப்படையில் 2024ஆம் ஆண்டில் இடம்பெற்ற முக்கியமான சில சம்பவங்களின் தொகுப்பு இது.

# 2024

## ஜனவரி

**02.01.2024** கிளிநொச்சி மாவட்டத்தில் மழை காரணமாக 13 ஆயிரத்து 897 ஏக்கர் நெற்செய்கை பாதிக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்டது.

**07.01.2024** உடையார்கட்டு குரவில் கிராமதீவில் கிணற்று நீருடன் எண்ணெய்க் கசிவு வெளியேற்றம்.

**08.01.2024** 48 கிலோ அபின் போதைப்பொருள் கற்கோவளத்தில் மீட்பு.

**19.01.2024** 14 ஆவது சர்வதேச வர்த்தகக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்.

**22.01.2024** நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் கொண்ட அரசியல்கட்சி ஒன்றின் தலைவர் உட்பட 5 பேர் தென்னிலங்கையில் சுட்டுப் படுகொலை.

**26.01.2024** யாழ். நகரில் ஊடக அடக்குமுறைக்கு எதிராகப் போராட்டம்



## பெப்ரவரி

**01.02.2024** சர்வதேச எதிர்ப்பையும் மீறி இலங்கையில் நிகழ்நிலைக் காப்புச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**13.02.2024** சாந்தனை இலங்கைக்கு அனுப்புவதற்குத் தயார் என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் இந்திய அரசின் தரப்பால் அறிவிக்கப்பட்டது.

**14.02.2024** உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள ஏழு ஆலயங்களில் வழிபட அனுமதி வழங்கப்பட்டது.

**26.02.2024** இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்டு, இலங்கைக்கு அனுப்பப்படவிருந்த சில மணிநேரங்களுக்கு முன்னதாக சாந்தன் உயிரிழப்பு.

**27.02.2024** மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து டி.எம்.டபிள்யூ.டி தென்னக்கோன் புதிய பொலிஸ்மா அதிபராக நியமனம்.

## மார்ச்

**01.03.2024** இலங்கை இந்திய அரசுகளின் கூட்டுச்சதியால், தமிழகத்தில் உயிரிழந்த சாந்தனின் திருவுடல் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைவு.

**03.03.2024** சாந்தனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் தமிழர் தாயகத்தில் துக்கதினம் அனுஸ்டிப்பு.

**08.03.2024** வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்ட 8 பேர் பொலிஸாரால் பலப்பிரயோகத்தைப் பயன்படுத்திக் கைது.

**12.03.2024** சூரியசக்தி மின்நிலையம் மட்டக்களப்பில் திறந்துவைப்பு.

## ஏப்ரல்

**03.04.2024** ராஜீவ்காந்தி கொலைவழக்கில் தொடர்புடைய முருகன், பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் இலங்கை வந்தடைவு.

**06.04.2024** திருகோணமலை குச்சவெளியில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சொந்தமான 2 ஆயிரத்து 506.5 ஏக்கர் நிலப்பரப்பை அடாத்தாக ஆக்கிரமித்து அங்கு 32 விகாரைகள் அமைக்கும் முயற்சிகள் முன்னெடுப்பு.

**07.04.2024** மன்னாரிலிருந்து இராமேஸ்வரம் வரையிலான பாக்கு நீரிணையை இரண்டு தமிழகச் சிறுவர்கள் நீந்திக் கடந்து சாதனை.

**11.04.2024** மிருதங்க வித்துவான் வரதராஜ சர்மா மறைவு.

**14.04.2024** வடமாகாண 12 வலயங்களிலும் உள்ள பாடசாலைகளில் 116 அபாயகரமான கட்டடங்கள் இருப்பதை வடமாகாண கல்வித் திணைக்களம் உறுதி செய்தது.

**24.04.2024** இலங்கையில் மலையகத் தமிழர்களும், வடக்கு - கிழக்கு தமிழர்களும் அரசாங்கத்தால் திட்டமிட்டு ஒடுக்கப்படுகின்றனர் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தனது வருடாந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியது.

**29.04.2024** பாரதிபுரம் தமிழர்கள் கொலைவழக்கில் 26 ஆண்டுகளின் பின்னர் பொலிஸாருக்குத் தண்டனை அறிவிக்கப்பட்டது.

**29.04.2024** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈழவேந்தன் கனடாவில் காலமானார்.



## மே

**08.05.2024** தமிழீழ விடுதலை இயக்கத் தலைவர் சிறீசபாரத்தினத்தின் 38ஆவது நினைவேந்தல் நிகழ்வு அனுஷ்டிப்பு.

**08.05.2024** மகாவலி அபிவிருத்தியின் பெயரால் மேற்கொள்ளப்படும் நில ஆக்கிரமிப்பை நிறுத்துமாறு வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் முல்லைத்தீவு மக்கள் கவனவீர்ப்பு போராட்டம்.

**13.05.2024** குமுதினிப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுப்பு.

**18.05.2024** 2009 மே மாதம் 18ஆம் திகதியன்று முள்ளிவாய்க்காலில் கட்டவிழ்த்த இன அழிப்புப் பெருந்துயரை நினைவுகூர்ந்து தாயகத்தில் பரவலாக அஞ்சலி முன்னெடுப்பு.



**18.05.2024** கனடாவில் இடம்பெறும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் போது இனப்படுகொலை என்ற சொல்லைப் பாவிக்க வேண்டாம் என்று இலங்கை அரசாங்கம் கனடாவுக்கு அழுத்தம்.

**23.05.2024** நினைவேந்தல்களை பொலிஸார் தடுக்கக் கூடாது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜூன்

01.06.2024 யாழ்.பொதுநூலக எரிப்பின் 43ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு யாழ். பொதுநூலகத்திற்கு முன்பாகக் கடைப்பிடிப்பு

18.06.2024 இந்திய இழுவைமடிப் படகுகளின் அத்துமீறலைத் தடுத்து நிறுத்தி தமது வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி யாழ். மீனவர்கள் யாழ். இந்தியத்துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டு போராட்டம்.

20.06.2024 இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கை வருகை.

20.06.2024 பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பல்கலைக்கழகங்களை முடக்கிப் போராட்டம்.

21.06.2024 மன்னார் மாவட்டத்தில் பல வருடங்களாக இருந்த சோதனைச் சாவடி மற்றும் வீதித்தடைகள் என்பன அகற்றப்பட்டதுடன், சோதனை நடவடிக்கைகளும் நிறுத்தம்.

30.06.2025 இலங்கைத் தமிழசுக் கட்சியின் பெருந்தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன் தனது 91ஆவது வயதில் காலமானார்.




## ஜூலை

01.07.2024 வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் நீதி வழங்கக் கோரி யாழில் போராட்டம்.

03.07.2024 கண்டி நீதிமன்ற வளாகத்தில் வெடிகுண்டு மிரட்டல்

06.07.2024 பிரிட்டன் தேர்தலில் ஈழத் தமிழ்ப் பெண்ணான உமாகுமரன் வெற்றி.

13.07.2024 காணாமலாக்கப்பட்ட குடும்பங்களுக்காக மனிதப்புதைகுழியில் அமெரிக்கா கண்காணிப்பு.

23.07.2024 தமிழ் மக்கள் மனதில் ஆறாத் வடுவாகியுள்ள கறுப்பு ஜூலைக் கலவரத்தின் 41ஆம் ஆண்டு நினைவேந்தல் தமிழர் தாயகத்தில் முன்னெடுப்பு.

26.07.2025 மன்னார் பேசாலையில் காற்றாலை அமைக்க எதிர்ப்புத் தெரிவித்து பொதுமக்கள் போராட்டம்.

## செப்ரெம்பர்

01.09.2024 ஜனாதிபதி ரணில் தேர்தல் பரப்புரைக்காக வவுனியாவுக்குச் சென்றார்.

06.09.2024 மருந்துக் கொள்வனவிலுள்ள முறைகேடுகளைத் தடுக்கக்கோரி மன்னாரில் மக்களால் போராட்டம்.

21.09.2024 தியாகதீபம் திலீபனின் 37ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு ஆவணக் காட்சியகத்தைக் கொண்ட தியாகதீபம் திலீபன் நினைவுச்சதுக்கம் நல்லூரில் திறந்துவைப்பு.

21.09.2024 - ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திசாநாயக்க வெற்றிபெற்றார்.

26.09.2024 தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிப்பு.

26.09.2024 வடக்கு மாகாண ஆளுநராக வேதநாயகன் ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்றார்.

27.09.2024 தியாகதீபம் திலீபனுக்கு நல்லூரில் அஞ்சலி

## ஓகஸ்ட்

01.08.2024 இலங்கையில் நாளாந்தம் சுமார் ஆயிரம் சட்டவிரோதக் கருக்கலைப்புகள் பதிவாகின்றன என்று அறிவிப்பு.

09.08.2024 இலங்கை கனடா வர்த்தக சம்மேளனமும், யாழ்ப்பாண வணிகர் கழகமும் இணைந்து வர்த்தக மேம்பாட்டுக்கான ஒப்பந்தம் கைச்சாத்து.

14.08.2024 முல்லைத்தீவு செஞ்சோலை வளாகத்தில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதல்களால் கொல்லப்பட்ட 54 மாணவர்களின் 18ஆவது ஆண்டு நினைவேந்தல் உணர்வுபூர்வமாக முன்னெடுப்பு.

19.08.2024 அமெரிக்கக் கடற்கரைக்குச் சொந்தமான போர்க் கப்பலொன்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைவு.

24.08.2024 இலங்கையின் முதல் பிரதமர் டி.எஸ். சேனநாயக்கவின் பேரனும், முன்னாள் அமைச்சருமான ருக்மன் சேனநாயக்க மறைவு.






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஒக்ரோபர்



08.10.2024 வடக்கின் சுற்றுலாவை மேம்படுத்த ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம்.

10.10.2024 நீண்டகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சதொச மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் மீள ஆரம்பம்.

13.10.2024 இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக், தீவக மக்களுடன் சந்திப்பு

17.10.2024 உலக வங்கியின் நிதியுதவியில் யானைகளிடமிருந்து விவசாயிகளின் வாழ்வாதாரப் பயிர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் கிளிநொச்சி மாவட்டத்துக்கு சூரியமின்கல யானை வேலி அமைக்கும் பணி ஆரம்பம்

21.10.2024 ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தை தமது நாட்டுக்குள் நுழைவதற்குத் தடை விதித்துள்ள இஸ்ரேலை கண்டித்து 105 நாடுகள் கையெழுத்திட்ட கடிதத்தில் இலங்கையும் கைச்சாத்து.

21.10.2024 யாழ். போதனா மருத்துவமனைக்குள் அத்துமீறி உள்நுழைந்து இந்திய இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டவர்களின் நினைவேந்தல் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு



## நவம்பர்

02.11.2024 கல்விச் சுற்றுலா சென்ற பஸ் விபத்தில் பல்கலை மாணவர்கள் 02 பேர் உயிரிழப்பு 39 பேர் படுகாயம்.

08.11.2024 மூத்த எழுத்தாளர் மு.பொன்னம்பலம் மறைவு.

07.11.2024 இலங்கைக்கு 'வசீகரிக்கும் தீவு' என்ற அடிப்படையில் தங்க விருது வழங்கப்பட்டது.

09.11.2024 ஈழத்து சௌந்தரராஜன் விஜயரட்ணம் மறைவு.

13.11.2024 இலங்கைச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவிக்குமாறு வலியுறுத்தி பாம்பன் பாலத்தில் போராட்டம்.

14.11.2025 இலங்கையில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. இதில் தேசிய மக்கள் சக்தி வெற்றிபெற்றது.

21.11.2029 வடமாகாணத்தில் வெள்ளப்பேரிடர்.











## டிசெம்பர்

03.12.2024 முல்லைத்தீவு, ஒதியமலைக் கிராமத்தில் இலங்கை இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட 32 தமிழர்களின் 40ஆவது நினைவதினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு.

06.12.2024 தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2025ஆம் ஆண்டின் முதல் 4 மாதங்களுக்கான இடைக்காலக் கணக்கறிக்கை சபையில் நிறைவேற்றப்பட்டது.

10.12.2024 நாட்டில் முதற்தடவையாக பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில் கூட்டப்பட்டது.

12.12.2024 ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தின் தூதுவர் காலித்நசர் அல் அமேரி ஆகியோர்களுக்கிடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

12.12.2024 பயிரழிவை நிவர்த்தி செய்யும் முகமாக குரங்குகளுக்கு கருத்தடை செய்யும் முன்னோடி வேலைத்திட்டம் மாத்தளையில் ஆரம்பம்.

15.12.2024 ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தியாவுக்குப் பயணம்.

15.12.2024 நாடாளுமன்றத்தின் சபாநாயகர் அசோக ரன்வல, கலாநிதிப்பட்டம் தொடர்பில் ஏற்பட்ட தொடர் எதிர்ப்புகள் மற்றும் அழுத்தங்களைத் தொடர்ந்து பதவி விலகினார்.

16.12.2024 ஜனாதிபதி அநுர தலைமையிலான இலங்கைத் தூதுக்குழுவுக்கும், இந்தியப் பிரதமர் மோடி தலைமையிலான இந்தியத்தூதுக் குழுவுக்கும் இடையிலான கலந்துரையாடல் இடம்பெற்றது.

21.12.2024 ஹற்றன் கண்டி பிரதான வீதியில் தனியார் பேருந்தொன்று பாதையை விட்டுவிலகி சுமார் 20அடி பள்ளத்தாக்கில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியது. மூவர் உயிரிழப்பு, 40இற்கும் மேற்பட்டவர்கள் காயம்.

28.12.2024 தமிழரசுக் கட்சியின் பதில் தலைவராக சீ.வி.கே.சிவஞானம் தெரிவுசெய்யப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2024ஆம் ஆண்டு உலகின் பல்வேறு நாடுகளில் அரசியல் மாற்றங்களை கொண்டு வந்த ஆண்டாக திகழ்கிறது. அமெரிக்கா, இங்கிலாந்தில் தேர்தல் மூலம் புதிய தலைவர்கள் ஆட்சிக்கு வந்துள்ளனர். சிரியா, வங்கதேசம் உள்ளிட்ட நாடுகளில் போராட்டம் மூலம் சர்வாதிகார ஆட்சி வீழ்த்தப்பட்டு ஜனநாயகம் மலர்ந்துள்ளது. அதேபோல், ஜனநாயகத்துக்கு விரோதமாகச் செயற்பட்ட தென்கொரிய அதிபரின் அதிகாரம் பறிக்கப்பட்டது. இவ்வாறாக 2024ஆம் ஆண்டில் உலகில் பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்திய முக்கியமான நிகழ்வுகளின் தொகுப்பு இது.






2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி ஜப்பானின் நோட்டோ தீபகற்பத்தில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தில் 500க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தனர். ஜப்பானின் கரையோரப் பகுதிகளை சுனாமிப் பேரலைகளும் தாக்கின.

பாகிஸ்தானில் பெப்ரவரி மாதம் 8ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் வெற்றிபெற்று ஆட்சியமைத்தது. கட்சித் தலைவர் நவாஸ் ஷெரீப்பின் சகோதரரான ஷெபாஸ் ஷெரீப் இரண்டாவது தடவையாக பிரதமராகப் பொறுப்பேற்றார். முன்னாள் பிரதமர் இம்ரான் கான் சிறையில் இருந்தபோதும், அவரது பாகிஸ்தான் தெஹ்ரிக் இ இன்சாப் கட்சி கணிசமான இடங்களில் வென்றது.

பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் பெப்ரவரி மாதம் 29ஆம் திகதிமுதல் பல நாள்கள் நிலவிய கன மழை மற்றும் வெள்ளப் பெருக்குக் காரணமாக, ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

பப்புவா மற்றும் நியூகினியாவில் மே மாதம் 24ஆம் திகதி அடுத்தடுத்து ஏற்பட்ட தொடர் நிலநடுக்கங்கள் காரணமாக, 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். இந்த வருடத்தில் ஒரே தடவையில் மிக அதிகளவானவர்கள் உயிரிழந்த சம்பவமாக இதுவே பதிவானது.

ஜூலை மாதம் 4ஆம் திகதி நடைபெற்ற இங்கிலாந்து நாடாளுமன்றத் தேர்தலில் 14 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த கன்சர்வேட்டிவ் கட்சி வீழ்ந்தது. கெய்ர் ஸ்டார்மர் தலைமையிலான தொழிலாளர் கட்சி வெற்றி பெற்றதை அடுத்து, ஸ்டார்மர் இங்கிலாந்தின் புதிய பிரதமராகப் பொறுப்பேற்றார்.

ஜூலை மாதம் 13ஆம் திகதி அமெரிக்க அதிபர் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில், ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. நூலிழையில் அவர் உயிர் தப்பினார்.




அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக இருந்த அதிபர் பைடன், தொடர்ச்சியாகத் தடுமாறியதைத் தொடர்ந்து, ஜூலை மாதம் 21ஆம் திகதி கமலா ஹரிஸ் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார்.



ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி பங்களாதேஷில் பிரதமர் ஷேக் ஹசீனாவின் ஆட்சி மக்கள் புரட்சியின் மூலம் கவிழ்க்கப்பட்டது. இதையடுத்து, அவர் இந்தியாவுக்குத் தப்பியோடினார்.

அமெரிக்க அதிபர் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில், செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி ட்ரம்ப் மீது இரண்டாவது தடவையாகத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலிலும் அவர் தப்பித்தார்.

ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவராகச் செயற்பட்டு வந்த ஹசன் நஸ்ரல்லா, செப்ரெம்பர் மாதம் 27ஆம் திகதி இஸ்ரேலால் நடத்தப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்டார். ஹிஸ்புல்லாவுக்கு எதிராக இஸ்ரேல் பெற்றுக் கொண்ட பெரிய வெற்றியாக இது பார்க்கப்படுகின்றது.



ஒக்ரோபர் மாதம் 11ஆம் திகதிமுதல் ஆபிரிக்க நாடான மொராக்கோவில் பெய்த கனமழை காரணமாக வறண்ட சஹாரா பாலைவனம் கடலாக மாறியது. இது தொடர்பான புகைப் படங்கள் வெளியாகி வைரலாகின.

நவம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெற்ற அமெரிக்க அதிபர் தேர்தலில், ட்ரம்ப் வெற்றிபெற்றார்.

நவம்பர் மாதம் 21ஆம் திகதி உக்ரைன் மீது கண்டம் விட்டுக் கண்டம் பாயும் அதிநவீன ஏவுகணைகளால் ரஷ்யா தாக்குதல் நடத்தியது. மூன்று வருடங்களாக இடம்பெற்றுவரும் இந்தப் போரில் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளை ரஷ்யா பயன்படுத்திய முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

ஹமாஸ் அமைப்பின் தலைவராகச் செயற்பட்ட யாயா சின்வார் ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதி இஸ்ரேலின் ட்ரோன் தாக்குதலில் கொல்லப்பட்டார். உடல் சிதைவடைந்த நிலையில், அவரின் விரலொன்றை வெட்டி, இஸ்ரேலுக்கு அனுப்பி உயிரிழந்தது சின்வார்தான் என்பதை இஸ்ரேல் இராணுவம் உறுதிப்படுத்தியது.

தென்கொரியாவில் கடந்த டிசெம்பர் மாதம் 3ஆம் திகதி திடீரென இராணுவச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. மக்களின் எதிர்ப்பாலும், போராட்டத்தாலும் அந்தச் சட்டம் வெறும் 12 மணிநேரத்தில் திரும்பப் பெறப்பட்டது.

டிசெம்பர் 4ஆம் திகதி பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரதமர் மைக்கேல் பார்னியர் தலைமையிலான அரசு தோல்வி அடைந்தது. பதவியேற்ற 91 நாட்களில் அவரது ஆட்சி முடிவுக்கு வந்தது.

டிசெம்பர் 4ஆம் திகதி பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரதமர் மைக்கேல் பார்னியர் தலைமையிலான அரசு தோல்வி அடைந்தது. பதவியேற்ற 91 நாட்களில் அவரது ஆட்சி முடிவுக்கு வந்தது.

சிரியாவில் அரை நூற்றாண்டு காலமாக சர்வாதிகார ஆட்சி நடத்திவந்த அசாத் குடும்பம், அல் ஷாம் போராளிகளின் எழுச்சியைத் தொடர்ந்து நாட்டை விட்டுத் தப்பியோடி ரஷ்யாவில் தஞ்சமடைந்தது. இதையடுத்து, சிரியாவில் போராளிகளின் ஆட்சி மலர்ந்தது.

டிசெம்பர் மாதம் 25ஆம் திகதி கஜகஸ்தானில் இருந்து பயணித்த அஜர்பைஜானுக்குச் சொந்தமான விமானம், வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 30 பேர் உயிரிழந்தனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 2024

இந்தியாவில் பல்வேறு திருப்பங்களை வழங்கிய வருடமாக 2024ஆம் ஆண்டு பதிவாகியுள்ளது. அயோத்தி ராமர் ஆலயம் திறப்பு, பிரதமர் மோடி மூன்றாவது முறையாகப் பிரதமராகப் பதவியேற்பு என பரப்புக்கள் நிறைந்ததாக இருந்த பாரதத்தின் பதிவுகள் சில...





ஜனவரி 22: அயோத்தி ராமர் கோயில் குடமுழுக்கு விழா நடைபெற்றது.

பெப்ரவரி 15: அரசியல் கட்சிகள் நிதி பெறும் தேர்தல் பத்திரங்கள் திட்டம் அரசமைப்புக்கு எதிரானது என்று இந்திய உயர்நீதிமன்றம் இரத்து செய்தது.

பெப்ரவரி 17: ஆந்திரா, ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து இன்சாட் 3டிஎஸ் செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

மார்ச் 21: மதுபான கொள்கை ஊழல் வழக்கில், டெல்லி முதலமைச்சர் அர்விந்த் கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டர். மக்களவை தேர்தல் 7 கட்டங்களாக நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்த 5 நாள்களுக்குப் பின்னர் இந்தக் கைது நடைபெற்றது.

ஏப்ரல் 19: மக்களவை தேர்தலின் முதல்கட்ட தேர்தல் ஆரம்பமாகியது.

ஜூன் 4: 2024 பொதுத் தேர்தல் மற்றும் சட்டமன்றத் தேர்தல்களுக்கான முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

ஜூன் 9: பா.ஜ.க.வைச் சேர்ந்த நரேந்திர மோடி தொடர்ந்து மூன்றாவது முறையாக இந்தியாவின் பிரதமராக பதவியேற்றார்.



ஜூன் 17: மேற்கு வங்கத்தில் இருந்து கொல்கத்தாவுக்குப் பயணித்த ரயில் விபத்துக்குள்ளானதில் 15 பேர் உயிரிழந்தனர்.

ஜூன் 20: தமிழ்நாடு, கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் அருந்திய 50 பேர் உயிரிழந்தனர். பலர் பாதிக்கப்பட்டனர்.

ஜூன் 28: கனமழை காரணமாக டெல்லியில் உள்ள இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தின் மேற்கூரை இடிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்தார்.

ஜூலை 2: உத்தரப்பிரதேசம், ஹாத்ராஸ் நகரில் நடந்த மத நிகழ்வொன்றில் நெரிசலில் சிக்கி 112 பேர் உயிரிழந்தனர்.

ஜூலை 30: கேரளாவின் வயநாடு மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் குறைந்தது 231 பேர் உயிரிழந்தனர். 397 பேர் காயமடைந்தனர், பலர் காணாமல் போயினர்.

ஓகஸ்ட் 9: கொல்கத்தாவில் உள்ள ஆர்.ஜி.கர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் பெண் முதுகலை பயிற்சி மருத்துவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் இந்தியா முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

ஓகஸ்ட் 23: திரிபுராவில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குக் காரணமாக 31 பேர் உயிரிழப்பு

ஓகஸ்ட் 28: குஜராத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குக் காரணமாக 28 பேர் உயிரிழப்பு

செப்ரெம்பர் 10: மணிப்பூரில் மாணவர்கள் நடத்தி வந்த போராட்டம் தீவிரமடைந்ததை அடுத்து அங்கு இணைய சேவை துண்டிக்கப்பட்டது.

ஒக்டோபர் 9: இந்திய தொழில்துறையின் அடையாளமாகத் திகழ்ந்த ரத்தன் டாடா காலமானார்.



நவம்பர் 16: இந்தியாவின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு நீண்ட தூரம் செல்லும் ஹைப்பர் சோனிக் ஏவுகணையை ஒடிசா கடற்கரையில் வெற்றிகரமாகப் பரிசோதித்தது.

டிசெம்பர் 1: பெஞ்சல் புயல் காரணமாக சென்னை, காஞ்சிபுரம், விழுப்புரம், திருவண்ணாமலை உள்ளிட்ட பகுதிகளில் கனமழை கொட்டித் தீர்த்ததால் வெள்ளம் ஏற்பட்டது. திருவண்ணாமலையில் நிலச்சரிவு ஏற்பட்டு 7 பேர் உயிரிழந்தனர்.

டிசெம்பர் 14 உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில், சீனாவின் டிங் லிரெனை வீழ்த்தி பட்டம் வென்றிருக்கிறார் இந்திய கிராண்ட் மாஸ்டரான டி.குகேஷ்.

டிசெம்பர் 15 இந்தியாவின் புகழ்பெற்ற தபேலாக் கலைஞர் ஸாக்கிர் ஹுசைன் தனது 73 வயதில் உடல்நலக்குறைவால் காலமானார்.

டிசெம்பர் 26 இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் உடல்நலக்குறைவால் காலமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளையாட்டு உலகில், 2024ஆம் ஆண்டு இடம்பெற்ற முக்கியமான சம்பவங்களின் தொகுப்பு இது.**

# 2024




ஜூன் மாதம் 22ஆம் திகதி நடைபெற்ற ரி–20 உலகக்கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில், தென்னாபிரிக்காவைத் தோற்கடித்து இந்தியா சம்பியனானது. இந்த வெற்றியுடன், ரோகித், கோலி, ஜடேஜா ஆகியோர் ரி–20 ஆட்டங்களில் இருந்து ஓய்வை அறிவித்தனர்.



றென்னிஸ் உலகின் முடிசூடா மன்னனாக வலம்வந்த ரபேல் நடால், நவம்பர் மாதம் 24ஆம் திகதியுடன் சர்வதேச றென்னிஸ் அரங்கில் இருந்து ஓய்வை அறிவித்தார்.



ஜூலை மாதம் 15ஆம் திகதி நடைபெற்ற யூரோ கிண்ண கால்பந்தாட்ட இறுதிப் போட்டியில், இங்கிலாந்தைத் தோற்கடித்து ஸ்பெய்ன் சம்பியனானது.



நவம்பர் மாதம் 25ஆம் திகதி நடைபெற்ற உலக செஸ் சம்பியன்ஷிப் போட்டியில் சீன வீரர் டிங் லிரேனை வீழ்த்தி, தமிழகத்தைச் சேர்ந்த இந்திய வீரர் குகேஷ் சம்பியன் பட்டம் வென்றார். இதன்மூலம் 18 வயதேயான குகேஷ் இள வயது உலக செஸ் சம்பியன் என்ற சாதனையை படைத்தார்.

ஜூலை மாதம் தொடக்கம் ஓகஸ்ட் மாதம் வரை பிரான்சின் தலைநகர் பரிஸில் இடம்பெற்ற ஒலிம்பிக் தொடரில் 40 தங்கப் பதக்கங்கள் உட்பட 146 பதக்கங்களுடன் அமெரிக்கா முதலிடம் பிடித்தது.



சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இருந்து ஓய்வு பெறுவதாக இந்திய சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் அறிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org